# தினபூமி

thinaboomi.com

நெல்லை, சனி, மார்ச் 29, 2025 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி பக்கம் 8 ₹ 3.00




## ஆஸ்திரேலியாவில் வரும் மே 3-ம் தேதி பொதுத்தேர்தல்: ஆளும் கட்சிக்கு கடும் சவால்

...2-ம் பக்கம்

## நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியான்மருக்கு உதவ இந்தியா தயார் - பிரதமர் மோடி தகவல்

...3-ம் பக்கம்

## பி.சி.சி.ஐ.-ன் ஒப்பந்தத்தில் மீண்டும் இடம்பெறுகிறார் முன்னணி வீரர் ஸ்ரேயாஸ்?

...6-ம் பக்கம்






● சென்னையில் நேற்று இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்திய நகரங்களில் வாழ்க்கூடிய சூழல்களை உருவாக்குவது குறித்த மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண்ராய், தென் மண்டல தலைவர் நந்தினி, துணைத்தலைவர் தாமஸ் ஜான் முத்தூட், தென்மண்டல இயக்குநர் ஜெயேஷ், துணைத்தலைவர் முகுந்தன், தலைமை இயக்குநர் சந்திரஜித் பானர்ஜி, முன்னாள் தலைவர் தினேஷ், டி.வி.எஸ். தலைவர் வேணுசீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### குற்றங்களுக்கு எதிராக உடனுக்குடன் நடவடிக்கை:

# தமிழக காவல்துறையினருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி

## சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவேசம்

சென்னை, மார்ச் 29-

**தமிழகத்தில் குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து சட்டம் ஒழுங்கை குறை கூற வேண்டாம் என்று சட்டசபையில் நேற்று தெரிவித்த முதல்வர் மு.க.ஸ்டாலின், குற்றங்களுக்கு எதிராக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் காவல்துறையினருக்கு எதிராக களங்கம் ஏற்படுத்த முயற்சி நடைபெறுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.**

**கவன ஈர்ப்பு தீர்மானம்**

தமிழக சட்டசபையின் நேற்று கேள்வி நேரமும், துறை ரீதியான மானியக் கோரிக்கை விவாதமும் நடந்தது.

அப்போது மதுரை உசிலம்பட்டி காவலர் கொலை தொடர்பாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

கவன ஈர்ப்பு தீர்மானம் முறையாக கொடுத்தால் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவை முன்னவர் துரைமுருகன் தெரிவித்தார். இதையடுத்து பேரவையில் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பு நேற்று விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படாது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

கவன ஈர்ப்பு விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால் சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

**குறை கூற வேண்டாம்**

தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், சபாநாயகரை கை நீட்டி பேசுவது மரபல்ல. நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். தயாராக உள்ளேன்.

டி.வி.யை பார்த்துதான் தெரிந்துகொண்டேன் எனக் கூற மாட்டேன். ஆனால், மரபை பின்பற்றுங்கள். குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்து சட்டம் ஒழுங்கை குறை கூற வேண்டாம். தமிழ்நாட்டில் நடைபெறும் குற்றங்களுக்கு எதிராக உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டிற்கு அவப்பெயரை ஏற்படுத்த மாநில விரோத சக்திகள், தமிழர் விரோத சக்திகள் முயற்சிக்கின்றன.

தமிழ்நாட்டில் காவல்துறையினருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி நடைபெறுகிறது என தெரிவித்தார் .

# தமிழகத்தில் எந்த திணிப்பையும் முதல்வர் அனுமதிக்க மாட்டார்

## துணை முதல்வர் உதயநிதி பேச்சு

சென்னை, மார்ச் 29-

**இந்தி திணிப்பு மட்டுமல்ல, எந்த திணிப்பையும் தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதிக்க மாட்டார். எந்த திணிப்பும் யாராலும் கொண்டுவர முடியாது என்று தெரிவித்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ரூபோட்டு பா.ஜ.க.வை அலறவிட்டார் முதல்வர் என்றும் அவர் தெரிவித்தார்.**

சட்டசபையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:- நான் பதிலுரை வழங்கும்போதெல்லாம் அ.தி.மு.க.வினர் அவையில் இருக்க மறுக்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் ஒரு வாட்டிக்கூட நான் பதில் சொல்லும்போது இருக்க மாட்றாங்க. கடந்த முறை எனது காரில் தவறாக ஏற நினைத்தவர்களை பாதை மாறி செல்லாதீர்கள் என்று வேண்டுகோள் வைத்தேன். எங்க காரு தப்பா போகாதுன்னு சொன்னாங்க... ஆனால் டெல்லி சென்று பல கார்களில் ஏறி, பாதை மாறி சென்றிருக்கிறார்கள்.

பொதுவாக சிலர் ஒரு பேப்பரில் எழுத தொடங்கும் போது 'உ' போட்டு எழுதுவர். ஆனால் நம்முடைய முதல்வர் 'ரூ' போட்டு இந்த பட்ஜெட்டை தொடங்கி வைத்துள்ளார். பாசிஸ்டுகள் எத்தனை ரூல்ஸ் போட்டு தமிழ்நாட்டை அடக்க நினைத்தாலும் பட்ஜெட்டில் ஒரே ஒரு 'ரூ'வை போட்டு அலற வைத்துள்ளார். இந்தி திணிப்பு மட்டுமல்ல, எந்த திணிப்பையும் தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அனுமதிக்க மாட்டார். எந்த திணிப்பும் யாராலும் கொண்டுவர முடியாது.

சென்னை பார்முலா 4 கார் பந்தயத்திற்கு எத்தனையோ எதிர்ப்புகள் வந்தன.. ஆனால், எதிர்த்தவர்களே பாராட்டும் அளவுக்கு சிறப்பாக நடத்தப்பட்டது. மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரைவில் வாய்ப்பு வழங்கப்படும். கடந்த 3 ஆண்டுகள் மட்டும் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களில் 2.65 லட்சம் பேருக்கு வேலை கிடைத்துள்ளது. 6,812 அறிவிப்புகளில், 96 சதவீத அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 3,803 பணிகள் முடிந்துள்ளன; எஞ்சிய பணிகளை செயல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

### கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட

# கிருஷ்ணா நதி நீர் தமிழ்நாடு எல்லைக்குள் வந்தடைந்தது

திருவள்ளூர், மார்ச் 29-

**சென்னை குடிநீர் தேவைக்காக, ஆந்திர மாநிலம்- கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்டுள்ள கிருஷ்ணா நதி நீர் தமிழக எல்லைக்கு வந்தடைந்தது. தமிழக நீர் வளத்துறையினர் மலர் தூவி வரவேற்றனர்.**

சென்னையின் குடிநீர் தேவைக்காக, தெலுங்கு கங்கை திட்டத்தின் கீழ் ஆந்திர அரசு ஆண்டு தோறும் ஜூலை முதல் அக்டோபர் வரை 8 டிஎம்சி, ஜனவரி முதல் ஏப்ரல் வரை 4 டிஎம்சி என, 12 டிஎம்சி கிருஷ்ணா நதி நீரை தமிழகத்துக்கு வழங்கவேண்டும். அந்த வகையில், ஆந்திர அரசு, சென்னைக் குடிநீருக்காக ஜனவரி முதல் ஏப்ரல் வரை வழங்கவேண்டிய கிருஷ்ணா நீரை வழங்கவேண்டும் எனக் கோரி, தமிழக நீர்வளத்துறை அதிகாரிகள், ஆந்திர நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு சமீபத்தில் கடிதம் எழுதினர்.

இதையடுத்து, சென்னைக் குடிநீருக்காக ஆந்திர மாநிலம் -கண்டலேறு அணையில் இருந்து, தெலுங்கு- கங்கை திட்ட கால்வாய் மூலம் கிருஷ்ணா நீரை கடந்த 24-ம் தேதி பகல் 12 மணியளவில், ஆந்திர நீர் வளத்துறையினர் திறந்து வைத்தனர். தொடக்கத்தில் விநாடிக்கு 500 கன அடி என, திறக்கப்பட்டு வந்த கிருஷ்ணா நீரின் அளவு , நேற்று முன்தினம் காலை 800 கனடியாக அதிகரிக்கப்பட்டது.

இந்நிலையில், கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்டுள்ள கிருஷ்ணா நீர், 152 கி.மீ., தூரம் பயணித்து, தமிழக எல்லையான, திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே தாமரைக் குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு நேற்று (மார்ச் 28) காலை 10 மணியளவில் வந்தடைந்தது. அப்போது விநாடிக்கு 52 கன அடி வீதம் வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீரை, தமிழக நீர் வளத்துறையினர் மலர் தூவி வரவேற்றனர். தமிழக எல்லையை வந்தடைந்துள்ள கிருஷ்ணா நீர், 25 கி.மீ., தூரம் பயணித்து (நேற்று இரவு ) பூண்டி ஏரியை சென்றடையும் என நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### அதிகரிக்கும் கோடை வெயில் தாக்கம்:

# மருத்துவ, சுகாதார வசதிகளை தயாராக வைத்திருக்க வேண்டும்

## மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தல்

புதுடெல்லி, மார்ச் 29-

**கோடை வெயில் தாக்கம் தொடர்பாக மருத்துவ, சுகாதார வசதிகளை தயாராக வைத்திருக்க வேண்டும் என்று மாநிலங்களுக்கு மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.**

நாடு முழுவதும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருவதால், வெப்ப வாதம் மற்றும் வெப்பம் தொடர்பான பிற நோய்களை திறம்பட நிர்வகிக்க சுகாதார வசதிகளை தயார்நிலையில் வைக்குமாறு மாநிலங்களை மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:- தேசிய நோய் கட்டுப்பாட்டு மையத்தின் இணையதளத்தில் உள்ள 'வெப்பம் மற்றும் ஆரோக்கியம்' குறித்த பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ வழிகாட்டுதல்கள் இந்த சமயத்தில் மிக முக்கியமானவை. எனவே தீவிர வெப்பத்தின் தாக்கத்தைத் தடுக்கவும், நிர்வகிக்கவும், சுகாதாரத் துறைகள் மற்றும் சுகாதார வசதிகளை திறம்பட தயார்படுத்துவதற்கும், இந்த வழிகாட்டுதல் ஆவணங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் பரப்புமாறு மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

வெப்ப வாதம் மற்றும் வெப்பம் தொடர்பான பிற நோய்களுக்கு திறம்பட சிகிச்சை அளிக்கும் வகையில் மருத்துவ அலுவலர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களின் திறனை வளர்ப்பதற்கான முயற்சிகளைத் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் சுகாதாரத் துறைகள் தொடர வேண்டும். அத்தியாவசிய மருந்துகள், நரம்பு வழி திரவங்கள், ஐஸ் பேக்குகள், அவசரகால குளிர்ச்சியை வழங்க தேவையான அனைத்து உபகரணங்களும் போதுமான அளவு கிடைப்பதற்கு சுகாதார வசதி தயார்நிலை மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும். குறிப்பாக அனைத்து சுகாதார நிலையங்களிலும் போதுமான குடிநீர் கிடைப்பது மற்றும் முக்கியமான பகுதிகளில் குளிரூட்டும் சாதனங்கள் தொடர்ந்து செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### 7.7, 7.2 ரிக்டர் அளவுகளில்

# மியான்மரில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## உருக்குலைந்த கட்டிடங்கள் - நூற்றுக்கணக்கானோர் பலி

நைப்பியிதோ, மார்ச் 29-

**7.7., 7.2 ரிக்டர் அளவில் மியான்மரில் அடுத்தடுத்து சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் கட்டிடங்கள் உருக்குலைந்தன. இதில் நூற்றுக்கணக்கானோர் பலியானதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், பலி எண்ணிக்கை மேலும் உயரும் என்று அஞ்சப்படுகிறது. அங்கு முழுவீச்சில் மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.**



மியான்மரில் நேற்று (வெள்ளிக்கிழமை) இந்திய நேரப்படி காலை 11.50 மணி அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 7.2 ஆக பதிவாகி உள்ளது. இதில் அந்த நாட்டின் பல்வேறு நகரங்களில் உள்ள கட்டிடங்கள் குலுங்கின. இதன் தாக்கம் மியான்மரை ஒட்டியுள்ள தாய்லாந்து, மலேசியா மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் உணரப்பட்டது. இதையடுத்து பகல் 12 மணி அளவில் மீண்டும் ஒரு நிலநடுக்கம் மியான்மரில் ஏற்பட்டது. பூமிக்கு அடியில் சுமார் 10 கிலோ மீட்டர் ஆழத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதை இந்திய நாட்டின் தேசிய நில அதிர்வு மையம் உறுதி செய்துள்ளது.

தற்போது மியான்மரில் ராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. மியான்மரின் மோனிவா நகருக்கு கிழக்கே சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அந்த நாட்டின் மத்திய பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. தாய்லாந்து தலைநகர் பாங்காகில் இந்த நிலநடுக்கத்தின் அதிர்வு உணரப்பட்டுள்ளது. இதை அமெரிக்கா மற்றும் ஜெர்மனியின் புவியியல் ஆய்வு அமைப்புகள் உறுதி செய்துள்ளன. சுமார் 17 மில்லியன் மக்கள் பாங்காகில் வசித்து வருகின்றனர். பெரும்பாலும் வானுயர்ந்த அடுக்கு மாடி குடியிருப்புகளில் இவர்கள் தங்கியுள்ளனர். நிலநடுக்க பாதிப்பு குறித்த எச்சரிக்கை வந்ததும் அனைவரும் படி வழியாக கீழே இறங்கி வந்தனர். அவர்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

நிலநடுக்கம் காரணமாக, மியான்மர் மற்றும் தாய்லாந்தின் பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் இடிந்து விழுந்து தரைமட்டமாகி உள்ளன. தாய்லந்து தலைநகர் பாங்காக்கில் மிகப்பெரிய கட்டிடம் சரிந்து விழுந்துள்ளது. புதிதாக கட்டப்பட்டுக் கொண்டிருந்த அந்த கட்டிடம் இடிந்து விழுந்ததால், இடிபாடுகளில் ஏராளமான ஊழியர்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மியான்மரின் மாண்டலே நகரில் உள்ள ஒரு மசூதி இடிந்து விழுந்ததில் சுமார் 20 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் பல இடங்களில் கட்டிடங்கள் இடிந்து விழுந்த போது பதிவு செய்யப்பட்ட வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. இதில் நூற்றுக்கணக்கானோர் பலியாகி இருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.

### பவுன் ரூ.67 ஆயிரத்தை நெருங்கியது:

# தங்கம் விலை புதிய உச்சம்

சென்னை, மார்ச் 29-

**தங்கம் விலை நேற்று (மார்ச் 28) புதிய உச்சத்தைத் தொட்டு விற்பனையானது. அதன்படி சென்னையில் நேற்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு பவுன் ரூ.66,720-க்கு விற்பனையானது.**


சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கம் விலை உயர்ந்தும், குறைந்தும் விற்பனையாகி வருகிறது. இந்நிலையில், கடந்த 20-ம் தேதி ஒரு பவுன் ரூ.66, 480 என்ற புதிய உச்சத்தை தொட்டது.

மறுநாள் 21-ம் தேதி பவுனுக்கு ரூ.320-ம், 22-ம் தேதி ரூ.320-ம், 24-ம் தேதி ரூ.120-ம் குறைந்து விற்பனையானது.

இந்நிலையில், 25-ம் தேதி ஒரு பவுனுக்கு ரூ.240 குறைந்தது. இதன்மூலம், 5 நாட்களில் பவுனுக்கு ரூ.1,000 குறைந்தது. இதனால் தங்கம் வாங்கும் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் இது ஆறுதலை தந்தது. ஆனால் விலை குறைவு நீடிக்கவில்லை.

தங்கம் விலை நேற்று (மார்ச் 28) புதிய உச்சத்தைத் தொட்டு விற்பனையானது. அதன்படி சென்னையில் நேற்று 22 கேரட் ஆபரணத் தங்கம் கிராமுக்கு ரூ.105 உயர்ந்து ஒரு கிராம் ரூ.8.340-க்கும், பவுனுக்கு ரூ.840 உயர்ந்து ஒரு பவுன் ரூ.66,720-க்கும் விற்பனையானது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.3 உயர்ந்து ஒரு கிராம் ரூ.114-க்கு விற்பனையானது.

**மார்க்கெட் விலை நிலவரம்**




BSE -191.51 பாயிண்ட் 77,414.92

NSE -72.60 பாயிண்ட் 23,519.35




**தங்கம்**
1 சவரன் ₹66,720
1 கிராம் ₹8,340



**வெள்ளி**
1 கிலோ ₹114,000
1 கிராம் ₹114.00

**டாலர்** ₹85.50



**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34


# ஆஸ்திரேலியாவில் மே 3-ம் தேதி தேர்தல்

## ஆளும் கட்சிக்கு கடும் சவால்

**சிட்னி, மார்ச் 29-**

ஆஸ்திரேலியாவில் வருகிற மே 3-ம் தேதி பொதுத் தேர்தல் ஆளும் கட்சிக்கு கடும் சவாலாக உள்ளது.

ஆஸ்திரேலியாவில் பிரதமர் அந்தோணி அல்பனீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சி ஆட்சி செய்து வருகிறது. இந்நிலையில், ஆஸ்திரேலியாவில் வரும் மே மாதம் 3-ந்தேதி பொதுத்தேர்தல் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக ஆஸ்திரேலியாவின் கவர்னர் சாம் மாஸ்டினை பிரதமர் அந்தோணி அல்பனீஸ் நேரில் சென்று சந்தித்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், தேர்தல் தேதி தொடர்பான அறிவிப்பை வெளியிட்டார்.



இந்த பொதுத்தேர்தல் ஆஸ்திரேலியாவின் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சிக்கு கடும் சவாலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் நிலவி வரும் விலைவாசி உயர்வு மற்றும் வீட்டுவசதி பற்றாக்குறை உள்ளிட்ட பிரச்சினைகள் ஆளும் கட்சிக்கான ஆதரவை பாதிக்கும் என கூறப்படுகிறது. முன்னதாக பிரதமர் அந்தோணி அல்பனீஸ், வீட்டுவசதி பற்றாக்குறையை சமாளிக்க அடுத்த 5 ஆண்டுகளில் 12 லட்சம் வீடுகள் கட்டப்படும் என கடந்த 2023-ம் ஆண்டு உறுதியளித்தார். ஆனால் அது தொடர்பான நடவடிக்கைகள் வேகமாக மேற்கொள்ளப்படவில்லை.

இதற்கிடையில், எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் தலைமையிலான கன்சர்வேடிவ் கட்சி கூட்டணிக்கு ஆதரவு அதிகரித்துள்ளதாக அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த 2022 தேர்தலில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியை ஆதரிக்காத 19 எம்.பி.க்கள் ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்திற்கு தேர்வாகினர். இந்நிலையில், இந்த ஆண்டு பொதுத்தேர்தல் முடிவுகளை தீர்மானிப்பதில் அணிசேரா எம்.பி.க்கள் முக்கிய பக்கு வகிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காசாவில் இஸ்ரேல் தாக்குதல்:

# ஹமாஸ் செய்தித்தொடர்பாளர் உள்பட 38 பேர் பலி

**காசா சிட்டி, மார்ச் 29-**

காசாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதலில் ஹமாஸ் செய்தித்தொடர்பாளர் உள்பட 38 பேர் உயிரிழந்துள்ளனர்.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்கு புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது. இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது.

இந்த போரில் காசா முனையில் இதுவரை 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது. பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. இஸ்ரேல், ஹமாஸ் இடையே கடந்த சில வாரங்களாக போர் நிறுத்தம் அமலில் இருந்தது.

அதேவேளை, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் 59 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைந்த நிலையில் இரு தரப்பும் மீண்டும் தாக்குதலை தொடங்கியுள்ளன. அந்த வகையில் காசா முனையின் பல்வேறு பக்குதிகள் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் செய்தித்தொடர்பாளர் அப்தலிப் அல் குவானு உள்பட 38 பேர் உயிரிழந்தனர்.

## பழைய உறவு முடிந்துவிட்டது:

# அமெரிக்க பொருட்களுக்கு மேலும் வரி விதித்த கனடா

**ஒட்டாவா, மார்ச் 29-**

பழைய உறவு முடிந்துவிட்டது என்று தெரிவித்துள்ள கனடா பிரதமர் அமெரிக்க பொருட்களுக்கு வரும் 2-ம் தேதி முதல்

மேலும் வரிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டது என அமெரிக்கா அதிபர் டிரம்பின் வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறுகிறார். அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வாகன இறக்குமதிக்கு 25 சதவீத வரியை அறிவித்தது. இது அடுத்த வாரம் நடைமுறைக்கு வர உள்ளது. கனடா பொருட்களுக்கு 25 சதவீத வரியையும், சீனா பொருட்களுக்கு 10 சதவீத வரியையும் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா அதிபர் டிரம்பின் வரிகளுக்கு பதிலளிக்கும் விதமாக கனடா பிரதமர் மார்க் கார்னி கூறியதாவது: அமெரிக்காவின் வரிகள் நியாயமற்றவை. ஏற்கனவே உள்ள வர்த்தக ஒப்பந்தங்களை மீறுவதாகும். அமெரிக்காவுடனான பழைய உறவு முடிந்துவிட்டது. அமெரிக்கா இனி நம்பகமான கூட்டாளி இல்லை. பேச்சுவார்த்தைகள் மூலம் சில நம்பிக்கையை மீட்டெடுக்க முடியும். கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான ஆழமான பொருளாதார, பாதுகாப்பு மற்றும் இராணுவ உறவுகளின் சகாப்தம் முடிந்து விட்டது. அமெரிக்க பொருட்களுக்கு ஏப்ரல் 2ம் தேதி மேலும் வரி விதிக்கப்படும்.

கனடாவை பலவீனப்படுத்த, நம்மை சோர்வடையச் செய்ய, அமெரிக்கா நம்மை சொந்தமாக்கிக் கொள்ளும் வகையில் பல முயற்சிகள் செய்கிறது. இதை நான் நிராகரிக்கிறேன். அது ஒரு போதும் நடக்காது. சமீபத்திய வரிகளுக்கு எதிராக எங்களது பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம். வரி விதிப்பை எதிர்த்து போராடுவோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கோடை விடுமுறை எதிரொலி:

# மும்பை - குமரி இடையே சிறப்பு ரயில்கள் இயக்கம்

**சென்னை, மார்ச் 29-**

கோடை விடுமுறையை முன்னிட்டு மும்பை- கன்னியாகுமரி இடையே சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றது.

கோடைகால விடுமுறையையொட்டி மும்பையில் இருந்து கன்னியாகுமரிக்கு நெல்லை வழியாக சிறப்பு ரெயில்களை இயக்க உள்ளது. மும்பை சி.எஸ்.எம்.டி.- கன்னியாகுமரி இடையே ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் வாராந்திர சிறப்பு ரெயில்கள் இயக்கப்படுகின்றன. மத்திய ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

மும்பை சி.எஸ்.எம்.டியில் இருந்து ஏப்ரல் 9-ந் தேதி முதல் ஜூன் 25-ந் தேதி வரை வாராந்திர சிறப்பு ரெயில் புதன்கிழமைதோறும் அதிகாலை 12.30 மணிக்கு புறப்பட்டு மறுநாளான வியாழக்கிழமை மதியம் 1.15 மணிக்கு கன்னியாகுமரி சென்றடையும். மறுமார்க்கத்தில் கன்னியாகுமரியில் இருந்து மும்பை சி.எஸ்.எம்.டி.க்கு ஏப்ரல் 10-ந்தேதி முதல் ஜூன் 26-ந் தேதி வரையில் இயக்கப்படுகிறது. இந்த சிறப்பு ரெயில் வாரத்தின் ஒவ்வொரு வியாழக்கிழமையும் பிற்பகல் 3.30 மணிக்கு புறப்பட்டு 3-வது நாளான சனிக்கிழமை அதிகாலை 4.15 மணிக்கு மும்பை சி.எஸ்.எம்.டி. வந்துசேரும்.

இந்த சிறப்பு ரெயில் தாதர், கல்யாண், லோனாவாலா, புனே, தவுண்ட், குருத்வாடி, சோலாப்பூர், கலபுர்கி, வாடி, கிருஷ்ணா, ராய்ச்சூர், மந்திராலயம் ரோடு, குண்டக்கல், ஆனந்தபூர், தர்மாவரம், எலகங்கா, கிருஷ்ணாராஜபுரம், பங்காருபேட்டை, திருப்பத்தூர், சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல், கொடைக்கானல் ரோடு, மதுரை, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி, நெல்லை, வள்ளியூர், நாகர்கோவில் ஆகிய ரெயில் நிலையங்களில் நின்றுசெல்லும். இந்த ரெயிலில் இரண்டு அடுக்கு குளிர்சாதன பெட்டிகள்-4, மூன்று அடுக்கு குளிர்சாதன பெட்டிகள்- 6, முன்பதிவு படுக்கை பெட்டிகள்-4, மற்றும் பொதுப்பெட்டிகள் இணைக்கப்பட்டிருக்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மழைத்துளி மண்ணின் உயிர்துளி**

# பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து

**சென்னை, மார்ச் 29-**

10-ம் வகுப்பு பொதுத்தேர்வு தொடங்கியுள்ள நிலையில் மாணவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் நேற்று முதல் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு தொடங்கியுள்ள நிலையில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது சமூக வலைதளப் பதிவில் தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:- 10-ம் வகுப்பு பொதுத் தேர்வுகளை எழுதும் மாணவச் செல்வங்களுக்கு வாழ்த்துகள். பயமும் பதற்றமுமின்றி தேர்வுகளை எதிர்கொண்டு, உங்கள் வாழ்வின் முன்னேற்றத்துக்கான மேற்படிப்புகளுக்குச் செல்லுங்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ரம்ஜான் பண்டிகை எதிரொலி: ஆடுகள் விற்பனை அமோகம்

**சென்னை, மார்ச் 29-**

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு ஆடுகள் விற்பனை சூடுபிடித்துள்ளது.

ரம்ஜான் பண்டிகை வருகிற 31-ம் தேதி (திங்கட்கிழமை) கொண்டாடப்பட உள்ள நிலையில், தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு கால்நடை சந்தைகளில் ஆடுகளின் விற்பனை சூடுபிடித்துள்ளது. குறைந்தபட்சம் ரூ.5,000 முதல் அதிகபட்சம் ரூ.40,000 வரை ஆடுகள் விற்கப்படுகின்றன. இந்த நிலையில், ரம்ஜான் பண்டிகையையொட்டி பெரம்பலூர், கிருஷ்ணகிரி, வள்ளியூர், திருமங்கலம், செஞ்சி, புதுக்கோட்டை, வேப்பூர் ஆகிய ஆட்டுச் சந்தைகளில் ஆடுகள் விற்பனை அமோகம் அடைந்துள்ளது. பல கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. குறிப்பாக கிருஷ்ணகிரி சந்தையில் நேற்று மட்டும் சுமார் ரூ.10 கோடி வரை ஆடுகள் விற்பனை நடந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# எழும்பூர் ரெயில் நிலையத்தில் தீ விபத்து: தெற்கு ரயில்வே விளக்கம்

**சென்னை, மார்ச் 29-**

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து தெற்கு ரெயில்வே விளக்கம் அளித்துள்ளது.

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் நேற்று முன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இது தொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

எழும்பூர் ரெயில் நிலையத்துக்கு வெளியே காந்தி இர்வின் சாலைக்கு அருகில் நேற்றுமுன்தினம் மதியம் 2.55 மணிக்கு சிறிய தீ விபத்து ஏற்பட்டது. உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மதியம் 3.10 மணிக்கு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. தீ விபத்து தொலைத்தொடர்பு கேபிளை மட்டுமே பாதித்தது. இந்த சம்பவத்தால் ரெயில் செயல்பாடுகள், தகவல் அமைப்புகளில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மரம் மனிதனின் உரம்**

**29-03-2025**




**மேஷம்** – வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து ஏற்றம் தரும். குடும்ப உறவுகளிடையே மனைவியால் மனக்கசப்பு உருவாகலாம். வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து நடந்தால் இலாபம் அதிகரிக்கும்.

**ரிஷபம்** – பெண்களின் நட்பால் சுகம் ஏற்படும். பெரியோர் ஆசியால் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொழில், வியாபாரத்தில் தொல்லைகள் குறைந்து, எல்லைகள் விரிவடைந்து ஏற்றம் வரும்.

**மிதுனம்** – வெற்றி மேல் வெற்றி வரும் நாள். அரசு அதிகாரிகள் மூலம் எதிர்பார்த்த அனைத்து வேலைகளும் அனுகூலமான திசைகளிலும் நகரும். மாணவர்கள் கல்வியில் சிறந்து நல்ல தேர்ச்சி அடைவர்.

**கடகம்** – வாழ்க்கையில் நல்ல, புதிய புதிய மாற்றங்கள் ஏற்படலாம். நேர்மையான வழியில் பணம் சம்பாதிக்க முயலுங்கள். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தினரிடையே நல்ல ஒற்றுமையை எதிர்பார்க்கலாம்.

**சிம்மம்** – எந்த ஒரு விஷயத்திலும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடக்க வேண்டிய நாள். பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணும் எண்ணத்தை கைவிடுவது நல்லது. உயர் அதிகாரிகளிடம் பணிவுடன் நடந்தால் உயர்வு உண்டு.

**கன்னி** – பேச்சால் பெருமாளையும் அசத்தி விடுவார்கள். அப்படி இருக்கையில் வருமானத்திற்கு கேட்கவேண்டுமா ? வளமான வாழ்வும், வாகன யோகமும் உண்டு. வியாபாரத்தில் கவனத்துடன் செயல்பட்டால் இழப்பைத் தவிர்க்கலாம்.

**துலாம்** – இன்று, எல்லாம் ஜெயமே. பகைவர்கள். கேட்காமலே உதவ முன்வருவர் நண்பர்கள். வீடு, மனை வாங்கும் எண்ணங்கள் மனதில் எழும். அதற்காக எதிர்பார்த்த கடன்கள் எளிதில் கிடைக்கும்.

**விருச்சிகம்** - ஆரோக்கியத்தைப் பொருத்து குழந்தைகளை நல்ல அக்கறையுடன் கவனிப்பது முக்கியம். வெளியூர் பயணங்களில் கவனம் தேவை. அமைதியும், ஆதரவான பேச்சு எதிர்ப்புக்களை குறைக்கும்.

**தனுசு** - வேண்டாத அலைச்சல்கள் மூலம் ஓய்வு குறையும். தெய்வமான அம்மாவின் தேக சுகத்தை பேண வேண்டிய நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த வரவுகள் இல்லாததால், புதிய முயற்சிகளை கைவிடுவது நல்லது.

**மகரம்** – சந்தோஷமான சூழ்நிலைகள் மனதில் தெம்பு தரும். மனைவியின் உதவிகள் கண்டு மனம் மகிழும். குழந்தைகள் பால் பாசம் பொழிவார்கள். அரசு ஆதரவால் தொழில் வளர்ச்சியில் திருப்தி நிலவும்.

**கும்பம்** – எதிர்பார்த்த தனலாபங்களில் ஏமாற்றமே மிஞ்சும். மனைவியின் உடல் நிலையில் அக்கறை தேவை. தொழில் முதலீடுகளை ஒத்திப் போடுவது நல்லது. வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

**மீனம்** – பொருளாதார நிலை போற்றும் படியாக இருக்கும். வசீகரமான பேச்சால் வருமானம் கூடும். வருமான உயர்வால் வளமும் அதிகரிக்கும். விரும்பிய வாகனத்தில் வெளியூர் செல்வீர்கள்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் கே.காதர் மொய்தீன், மாநில பொதுச் செயலாளர் முகமது அபுபக்கர், செயலாளர் ஷாஜகான், மாணவரணி செயலாளர் முகமது அஷ்ரத் ஆகியோர் சந்தித்து, ஒன்றிய அரசு மக்களவையில் அறிமுகம் செய்துள்ள வக்பு சட்டத் திருத்த முன்வடிவினை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தனித் தீர்மானத்தை நிறைவேற்றியமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# 10-ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் மாணவர்களுக்கு இ.பி.எஸ் வாழ்த்து

**சென்னை, மார்ச் 29-**

10-ம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு ஆல் தி பெஸ்ட் என்று எடப்பாடி பழனிசாமி எக்ஸ் தளப்பதிவில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் நேற்று முதல் 10-ம் வகுப்பு பொதுத் தேர்வு தொடங்கியுள்ள நிலையில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளப்பதிவில் தேர்வு எழுதவுள்ள மாணவர்களுக்கு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள மாணவச் செல்வங்களுக்கு ஆல் தி பெஸ்ட் பாசிடீவ் அடிடீயூட் உடன் தேர்வை எதிர் கொண்டு, உங்கள் முயற்சி சிறக்க நல்ல மதிப்பெண்களுடன் அனைத்து மாணவ-மாணவியரும் தேர்ச்சி பெற்று சிறக்க வாழ்த்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

# கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும்

## கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 29-**

கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழ்நாடு, கேரளா, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களை உள்ளடக்கிய தென்மண்டல கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கம் நாமக்கல்லை தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகிறது. மத்திய அரசுக்கு சொந்தமான எண்ணை நிறுவனங்களின் கிடங்குகளில் இருந்து 5 ஆயிரம் டேங்கர் லாரிகள் மூலம் லோடு ஏற்றி ஒப்பந்த அடிப்படையில் 6 மாநிலங்களில் உள்ள கியாஸ் பாட்டிலிங் பிளாண்டுகளுக்கு கியாசை எடுத்து வரும் பணியை சங்க உறுப்பினர்களின் லாரிகள் மேற்கொண்டு வருகின்றன.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்ட புதிய ஒப்பந்த விதிகளில் 2 அச்சு லாரிகளை பயன்படுத்த கூடாது. 3 அச்சு லாரிகளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மாற்று ஓட்டுனர் இல்லாத பட்சத்தில் ரூ.20 ஆயிரம் அபராதம் வதிக்கப்படும் என்பது உள்பட பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளால் டேங்கர் லாரிகளை இயக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக கூறி லாரி உரிமையாளர்கள் சங்கத்தினர் நேற்று காலை முதல் காலவரையற்ற போராட்டத்தை தொடங்கினர். இதனால் எண்ணை நிறுவன கிடங்குகளில் இருந்து பாட்லிங் பிளாண்டுகளுக்கு கியாஸ் ஏற்றி செல்லப்படும் பணிகள் முற்றிலும் பாதிக்கப்பட்டன. இதனால் கியாஸ் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதனைதொடர்ந்து நேற்று டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினருடன் எண்ணை நிறுவன அதிகாரிகள் கோவையில் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் சுமூக உடன்பாடு ஏற்படாததால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. இதனால் எங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை வேலை நிறுத்தபோராட்டம் தொடரும் என கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். அதன்படி 2-வது நாளாக நேற்று கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தபோராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தென்மண்டல கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:- ஆயில் நிறுவன அதிகாரிகளுடனான பேச்சுவார்த்தையில் எந்தவித உடன்பாடும் ஏற்படாததால் தென் மண்டலத்தில் கியாஸ் டேங்கர் லாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளநிலையில் நாடு முழுவதும் உள்ள கியாஸ் டேங்கர் லாரிகளும் இந்த போராட்டத்தில் ஈடுபட முன் வந்துள்ளன. ஆனாலும் இன்னும் ஒரு வாரங்களுக்கு கியாஸ் தட்டுப்பாடு வராது. அதன் பின்னர் கியாஸ் தட்டுப்பாடு ஏற்படும்.

தென்மண்டலத்தில் 5 ஆயிரம் கேஸ் டேங்கர் லாரிகள் ஓடினாலும் 3 ஷிப்டுகளாக அந்த லாரிகள் பிரிக்கப்பட்டு நாள் ஒன்றுக்கு 1500க்கும் மேற்பட்ட லாரிகளில் கியாஸ் நிரப்பி பாட்டலிங் பிளாண்டுகளுக்கு கொண்டு வரப்படுவது வழக்கம். அந்த பணிகள் முற்றிலும் தற்போது முடங்கி உள்ளதால் நாள் ஒன்றுக்கு 18 லட்சம் சிலிண்டர்களில் கியாஸ் நிரப்பும் பணி பாதிக்கப்பட்டுள்ளநிலையில் 2 நாட்களில் மட்டும் 36 லட்சம் கியாஸ் சிலிண்டர்களில் கியாஸ் நிரப்பும் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன. ஒரு டேங்கர் லாரியில் 18 ஆயிரம் கிலோ கியாஸ் நிரப்பப்பட்டு கொண்டு செல்லப்படும். அதன்மூலம் 1200 சிலிண்டர்கள் நிரப்பப்படும். கடந்த 2 நாட்களில் 3 டேங்கர் லாரிகள் இயங்காததால் 36 லட்சம் சிலிண்டர்களில் கியாஸ் நிரப்பும் பணி தடை ஏற்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்ததால் கியாஸ் டேங்கர் லாரி உரிமையாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200 கோடி ரூபாய் வீதம் 2 நாட்களில் 400 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இந்த பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில், தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் பெட்ரோலியத்துறை மந்திரி ஹர்தீப் சிங் புரி ஆகியோரிடம் எங்கள் கோரிக்கைகள் தொடர்பாக விரைவில் முறையிட உள்ளோம். மக்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்றால் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை தொடர்பாக இது வரை எந்த தகவலும் இல்லை கோரிக்கைகள் நிறைவேறும் வரை எங்களது போராட்டம் தொடரும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# இரட்டை அர்த்தத்தில் பேசிய ஆசிரியர் பணியிடை நீக்கம்

**கள்ளக்குறிச்சி, மார்ச் 29-**

9-ம் வகுப்பு மாணவிகளிடம் இரட்டை அர்த்தத்தில் பேசிய ஆசிரியர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

கள்ளக்குறிச்சி நான்கு முனை சந்திப்பு அருகே அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளியில் கள்ளக்குறிச்சி மட்டுமின்றி கச்சிராயப்பாளையம், சின்னசேலம், சங்கராபுரம், தியாகதுருகம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த ஏராளமான மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த நிலையில் இப்பள்ளியில் சமூக அறிவியல் ஆசிரியராக பணியாற்றி வந்த அன்பழகன் (வயது 59) என்பவர் 9-ம் வகுப்பு படிக்கும் மாணவிகளிடம் இரட்டை அர்த்தத்தில் பேசியதாக தெரிகிறது. இது குறித்து மாணவிகள் பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர். மேலும் கள்ளக்குறிச்சி மாவட்ட கலெக்டர், முதன்மை கல்வி அதிகாரி மற்றும் உயர் அதிகாரிகளுக்கும் மாணவிகள் புகார் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து ஆசிரியர் அன்பழகனை துறை ரீதியாக பணியிடை நீக்கம் செய்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா உத்தரவிட்டுள்ளார். பணியிடை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர் அன்பழகன் இன்னும் 3 மாதத்தில் ஓய்வு பெற உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் பிரச்சினைகளை பற்றி பேச எனக்கு அனுமதி தரவில்லை

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



**சென்னை, மார்ச் 29-**

மக்கள் பிரச்சினைகளை பற்றி பேச எனக்கு அனுமதி தரவில்லை, சபாநாயகர் திட்டமிட்டு எங்களை சட்டசபையில் இருந்து வெளியேற்றியுள்ளார் என்று எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையின் நேற்றைய அலுவல்கள் தொடங்கி நடைபெற்றன. கேள்வி நேரமும், துறைரீதியான மானியக் கோரிக்கை விவாதமும் நடந்து வருகிறது. அப்போது மதுரை உசிலம்பட்டி காவலர் கொலை தொடர்பான சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார்.

கவன ஈர்ப்பு தீர்மானம் முறையாக கொடுத்தால் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவை முன்னவர் துரைமுருகன் தெரிவித்தார். இதையடுத்து சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பு நேற்று விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படாது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

கவன ஈர்ப்பு தீர்மானம் மீதான விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால் சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது குறுக்கிட்ட சபாநாயகர் அவையின் மரபின்படி அறிவிப்பே கொடுக்காமல் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது என தெரிவித்தார். தொடர்ந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டதால், அவர்களை வெளியேற்ற சபாநாயகர் உத்தரவிட்டார். இதையடுத்து அவர்கள் அவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.

இந்த நிலையில் சட்டசபைக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:- மக்கள் பிரச்சினைகளை கூறுவதே எதிர்க்கட்சியின் கடமை. ஆனால் நேற்று மக்கள் பிரச்சினைகளை பற்றி பேச எனக்கு அனுமதி தரவில்லை. மக்களை பற்றி அரசுக்கு கவலை இல்லை. குடும்பத்தைப் பற்றி மட்டுமே தி.மு.க. அரசு கவலை கொள்கிறது. உசிலம்பட்டி காவலர் கொலை தொடர்பாக பேச சட்டசபையில் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

காவலரையே கொலை செய்யும் அளவிற்கு போதைப்பொருள் வியாபாரிகள் தைரியம் பெற்றுள்ளனர். போதைப்பொருளை கட்டுப்படுத்த தி.மு.க. அரசு தவறிவிட்டது. கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை சுதந்திரமாக விற்பனை செய்கின்றனர். காவலர்களுக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் தமிழகத்தில் நிலவுகிறது.

காவல்துறை, காவலர்களையாவது காப்பாற்ற வேண்டும். தி.மு.க. ஆட்சியில் பெண்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாக உள்ளது.

எங்களை திட்டமிட்டு சட்டசபையில் இருந்து சபாநாயகர் வெளியேற்றியுள்ளார். எவ்வளவு முக்கியமான பிரச்சினையாக இருந்தாலும் துணை முதல்வரின் பதிலுரை தடை படக்கூடாது என்று நினைக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

# ஏ.ஐ. மாடல்களை பயன்படுத்த அரசு ஊழியர்களுக்கு தடையா?

## பார்லி.யில் மத்திய அமைச்சர் விளக்கம்

**புதுடெல்லி, மார்ச் 29-**

மத்திய அரசு ஊழியர்கள், செயற்கை நுண்ணறிவு மாடல்களை பயன்படுத்த எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை என்று மத்திய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மக்களவையில், பேரிடர் மேலாண்மை திருத்த மசோதா-2024, ரெயில்வே திருத்த மசோதா-2024 ஆகியவை கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டன. பிறகு மாநிலங்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அங்கும் நிறைவேற்றப்பட்ட பிறகு, மக்களவையில் நேற்று அந்த மசோதாக்களில், சுதந்திரம் பெற்ற 75-வது ஆண்டு என்பதற்கு பதிலாக, 76-வது ஆண்டு என்று திருத்தம் செய்யப்பட்டது. அந்த திருத்தங்களுடன் மக்களவையில் இரு மசோதாக்களும் நிறைவேற்றப்பட்டன. இந்த நிலையில் மாநிலங்களவை கேள்வி நேரத்தில், பதில் அளித்த மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், ''மத்திய அரசு ஊழியர்கள், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) மாடல்களை பயன்படுத்த எவ்வித தடையும் விதிக்கப்படவில்லை. இருப்பினும், பொது தகவலின் ரகசியத்தன்மை, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்ய ஊழியர்கள் எச்சரிக்கையுடன் பயன்படுத்த வேண்டும்'' என்று கூறினார். மற்றொரு கேள்விக்கு பதில் அளித்த ஜிதேந்திர சிங், '' கிராமப்புற மக்களும் தங்களது குறைகளை தெரிவிக்க வசதியாக, ஆன்லைன் குறைதீர்ப்பு இணையதளத்தை நாடு முழுவதும் உள்ள பொது சேவை மையங்களுடன் இணைத்துள்ளோம். இதனால், 5 லட்சத்து 10 ஆயிரம் பொது சேவை மையங்கள் மூலமாக பொதுமக்கள் குறைகளை பதிவு செய்யலாம்'' என்று கூறினார்.

# அரசு நிதியை தவறாக பயன்படுத்தியதாக புகார்

## கெஜ்ரிவால் மீது வழக்குப்பதிவு

**புதுடெல்லி, மார்ச் 29-**

அரசு நிதியை தவறாக பயன்படுத்திய விவகாரத்தில் கெஜ்ரிவால் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அரசு நிதியை முறைகேடாக பயன்படுத்தி பெரிய விளம்பர பலகைகளை நிறுவியதாக முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பான அறிக்கையை டெல்லி போலீசார் கோர்ட்டில் சமர்ப்பித்தனர். டெல்லியில் முதல்வர் ரேகா குப்தா தலைமையில், பா.ஜ., ஆட்சி நடக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக ஆம் ஆத்மி கட்சி ஆட்சி செய்தது.

டெல்லியின் துவாரகா பகுதியில், அரசு நிதியை தவறாக பயன்படுத்தி, ஆம் ஆத்மிக்கு விளம்பரம் ஏற்படுத்தும் நோக்கில், பெரிய அளவில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டன. இது தொடர்பாக முன்னாள் முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், அவரது கட்சி முன்னாள் எம்.எல்.ஏ., குலாப் சிங், துவாரகா கவுன்சிலர் நிதிகா சர்மா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அதாவது அரசு நலத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை காட்டிலும், அவற்றை விளம்பரம் செய்ய அதிகம் செலவிடப்பட்டதாக கூறப்பட்டது. இந்நிலையில், அரசு நிதியை தவறாக பயன்படுத்திய புகாரில், அரவிந்த் கெஜ்ரிவால், குலாப் சிங், நிதிகா சர்மா ஆகியோர் மீது, எப்.ஐ.ஆர்., பதிவு செய்ய போலீசுக்கு உத்தரவிடக் கோரி, டெல்லி ரோஸ் அவென்யூ கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதை விசாரித்த நீதிபதி, மூவர் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிட்டது. இந்த நிலையில், கெஜ்ரிவால் உள்ளிட்டோர் மீது பொது சொத்துரிமைச் சட்டத்தை மீறியதாக டெல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போது, கெஜ்ரிவால் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது குறித்த அறிக்கையை போலீசார் கோர்ட்டில் சமர்பித்தனர். இதையடுத்து, இந்த வழக்கின் விசாரணையை ஏப்.,18ம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது. ஏற்கனவே, மதுபான கொள்கை முறைகேடு செய்ததாக கெஜ்ரிவால் மீது அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்து விசாரித்து வரும் நிலையில், தற்போது டெல்லி போலீசார் வழக்குப்பதிவு செய்திருப்பது அவருக்கு மேலும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

பயங்கர நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட

# மியான்மருக்கு உதவ இந்தியா தயார்-பிரதமர் மோடி அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 29-**

இந்தியா அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக உள்ளது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

மியான்மர் மற்றும் தாய்லாந்தில் நேற்று அடுத்தடுத்து கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. மியான்மரின் மாண்டலே அருகே முதலில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 7.7 ஆக பதிவாகியிருந்தது. சிறிது நேரத்தில் 6.4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. அண்டை நாடுகளான வியட்நாம், மலேசியா, வங்காளதேசம் மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களிலும் இதன் தாக்கம் உணரப்பட்டது.

நிலநடுக்கம் காரணமாக, மியான்மர் மற்றும் தாய்லாந்தின் பல்வேறு இடங்களில் கட்டிடங்கள் இடிந்து விழுந்து தரை மட்டமாகி உள்ளன. தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் மிகப் பெரிய கட்டிடம் சரிந்து விழுந்துள்ளது. புதிதாக கட்டப்பட்டுக்கொண்டிருந்த அந்த கட்டிடம் இடிந்து விழுந்ததால், இடிபாடுகளில் ஏராளமான ஊழியர்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. மியான்மரின் மாண்டலே நகரில் உள்ள ஒரு மசூதி இடிந்து விழுந்ததில் சுமார் 20 பேர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. கட்டிடங்கள் இடிந்து விழுந்தபோது பதிவு செய்யப்பட்ட வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவீச்சில் மீட்பு பணிகள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் மியான்மர் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட பேரிடருக்கு பிரதமர் மோடி வருத்தம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், மியான்மர் மற்றும் தாய்லாந்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து கவலை அளிக்கிறது. அனைவரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக பிரார்த்தனை செய்கிறேன்.

இந்தியா சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்க தயாராக உள்ளது. இது சம்பந்தமாக, அதிகாரிகளை தயார் நிலையில் வைத்திருக்குமாறு கேட்டுக் கொண்டார். மியான்மர் மற்றும் தாய்லாந்து அரசாங்கங்களுடன் தொடர்பில் இருக்குமாறு வெளியுறவு அமைச்சகத்தையும் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 100 நாள் வேலை திட்டத்தில் தினசரி ஊதியம் ரூ.17 உயர்வு

**சென்னை, மார்ச் 29-**

தமிழகத்தில் 100 நாள் வேலை திட்டத்தில் தினசரி ஊதியம் உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

தமிழகத்திற்கு 100 நாள் வேலை திட்ட தினசரி ஊதியத்தில் ரூ.17 ரூபாய் மத்திய அரசு உயர்த்தியது. ஏப்ரல் 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. கிராமப்புற மக்களின் வாழ்வை மேம்படுத்த, 100 நாள் வேலை அளிக்கும் திட்டத்தை, 2005ல் அப்போதைய காங்கிரஸ் அரசு கொண்டு வந்தது. தமிழகத்தில், 2008 - 09ம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

பெண்களுக்கும் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு, 5 கி.மீ., சுற்றளவுக்குள், ஓராண்டில் 100 நாட்களுக்கு வேலை உத்தரவாதம் அளிக்கப்பட்டது. கிராமப்புறங்களில் சாலைகள், குளங்கள், குட்டைகள், கிணறுகள் உள்ளிட்ட பொது சொத்துக்களை உருவாக்குவதே, இத்திட்டத்தின் பிரதான நோக்கம். நாடு முழுதும், 740 மாவட்டங்களில், 13.42 கோடி பேர் பயனாளிகளாக உள்ளனர். இந்த திட்டத்தில் பணியாற்றியவர்களுக்கு, 3,796 கோடி ரூபாய் மத்திய அரசு விடுவிக்காமல் நிறுத்தி வைத்து உள்ளது என தமிழக அரசு குற்றம் சாட்டி இருந்தது. அதுமட்டுமின்றி மத்திய அரசை கண்டித்து தி.மு.க., ஆர்ப்பாட்டம் அறிவித்து உள்ளது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் தமிழகத்தில் 100 நாள் வேலை திட்ட தினசரி ஊதியம் 319 ரூபாயில் இருந்து 336 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. 2024-25ம் நிதியாண்டில் ஊதியமாக ரூ.319 வழங்கப்பட்டு வந்த நிலையில் தற்போது உயர்த்தப்பட்டு உள்ளது.

# சட்டப்பேரவையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளியேற்றம்

## ஒருநாள் சஸ்பெண்ட் செய்து சபாநாயகர் உத்தரவு

**சென்னை, மார்ச் 29-**

சட்டசபையில் அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ஒருநாள் இடைநீக்கம் செய்ய சபாநாயகர் அப்பாவு உத்தரவிட்டார்.

தமிழக சட்டசபையின் நேற்றைய அலுவல்கள் தொடங்கி நடைபெற்றன. கேள்வி நேரமும், துறை ரீதியான மானியக் கோரிக்கை விவாதமும் நடந்து வருகிறது. அப்போது மதுரை உசிலம்பட்டி காவலர் கொலை தொடர்பாக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்தார். கவன ஈர்ப்பு தீர்மானம் முறையாக கொடுத்தால் மட்டுமே விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று அவை முன்னவர் துரைமுருகன் தெரிவித்தார். இதையடுத்து பேரவையில் எடப்பாடி பழனிசாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பு நேற்று விவாதத்துக்கு எடுத்து கொள்ளப்படாது என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

கவன ஈர்ப்பு விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால் சட்டசபையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது குறுக்கீட்ட சபாநாயகர் அவையின் மரபின்படி அறிவிப்பே கொடுக்காமல் பேசுவதற்கு அனுமதிக்க முடியாது என பதில் தெரிவித்தார். தொடர்ந்து முன் அனுமதி பெற்றே பேச வேண்டும் என கடந்த ஆட்சியில் சபாநாயகர் தனபால் கூறியதே, இப்போதும் கடைபிடிக்கப்படுகிறது என அமைச்சர் எ.வ.வேலு பதில் அளித்தார். தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், சபாநாயகரை கை நீட்டி பேசுவது மரபல்ல... நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். தயாராக உள்ளேன். டிவியை பார்த்துதான் தெரிந்துகொண்டேன் எனக் கூற மாட்டேன். ஆனால், மரபை பின்பற்றுங்கள் என கூறினார்.

இதனை தொடர்ந்து பேச அனுமதி அளிக்காததால் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் அமளியில் ஈடுபட்டனர். தொடர்ந்து அமளியில் ஈடுபட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை வெளியேற்ற சபாநாயகர் உத்தரவிட்டார். தொடர்ந்து அவர்கள் அவையில் இருந்து வெளியேற்றப்பட்டனர். அவையில் இருந்து அதிமுகவினரை வெளியேற்ற உத்தரவிட்ட பின் அவர்களை நேற்று ஒரு நாள் சஸ்பெண்ட் செய்து சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.

# கண்ணமங்கலம் ஏரியில் கண்ணாடி பாலம், ரோப் கார் அமைக்கப்படுமா?

## சட்டசபையில் அமைச்சர் ராஜேந்திரன் பதில்

**சென்னை, மார்ச் 29-**

தண்ணமங்கலம் ஏரியில் கண்ணாடி பாலம் மற்றும் ரோப் கார் அமைக்கப்படுமா என்ற எம்.எல்.ஏ. கேள்விக்கு அமைச்சர் பதில் கூறியுள்ளார். தமிழக சட்டசபையில் நேற்றைய கேள்வி நேரத்தின் போது, கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் கண்ணமங்கலம் பகுதியில் 150 எக்கர் ஏரி உள்ளது. அதில் படகு குளம் அமைக்கப்படுமா? பீகாரில் ராஜ்கீர் என்ற இடத்தில் கண்ணாடி பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு சுற்றுலா பயணிகள் அதிக அளவில் வருகின்றனர். அது போல கண்ணமங்கலத்தில் கண்ணாடி பாலம் மற்றும் ரோப் கார் அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நிதி பங்களிப்பு இல்லாமால் இருப்பதால் தனியார் பங்களிப்பு உதவியுடன் ரோப் கார் அமைப்படுமா? என்று சட்டமன்ற உறுப்பினர் பிச்சாண்டி கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜேந்திரன், கண்ணமங்கலம் பகுதியில் கண்ணாடி பாலம் மற்றும் ரோப் கார் அமைக்க நிதி நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதில் அளித்தார்.

# த.வெ.க. பொதுக்குழு கூட்டத்தில் மத்திய அரசு மீது விஜய் விமர்சனம்

**சென்னை, மார்ச் 29-**

த.வெ.க. முதல் பொதுக்குழு கூட்டத்தில் பேசிய விஜய் மத்திய அரசு மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்.



தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுக்குழு கூட்டத்தில் விஜய் பேசியதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்களுக்கும், தோழிகளுக்கும் வணக்கம்... வணக்கம்.. கதறல் சத்தம் எல்லாம் எப்படி இருக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் வாழ் வேண்டும் என்பது நல்ல அரசியலா?.;

இல்லை ஒரு குடும்பம் மட்டும் வாழ வேண்டும் என்பது நல்ல அரசியலா?. மாநாட்டில் இருந்து தற்போது வரை இடையூறு வந்து கொண்டு தான் இருக்கிறது. எத்தனை தடைகள் வந்தாலும் தவெக முன்னேறி செல்லும். ரசிகர்கள், தொண்டர்களுக்கு தடை போட நீங்கள் யார்?.

சட்டத்தை மதிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காக அமைதியாக இருக்கிறேன். அணை போட்டு ஆற்றை தடுக்கலாம் காற்றை தடுக்க முடியாது. அப்படி தடுக்க நினைத்தால் சூறாவளி காற்றாக ஏன் புயலாக கூட மாறும். பல்வேறு சோதனைகளைக் கடந்துமக்கள் சந்திப்பு தோழர்கள் சந்திப்பு நடந்து கொண்டு தான் இருக்கிறது இனியும் நடக்கும்.

மன்னராட்சி முதல்-அமைச்சர் அவர்களே.... முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களே... பெயரை மட்டும் வீராப்பாக சொன்னால் மட்டும் போதாதே முதல்-அமைச்சர் அவர்களே.... செயலிலும் காட்ட வேண்டும் அவர்களே!...

பாஜக ஆட்சியை பாசிச ஆட்சி என்று சொல்லிவிட்டு நீங்கள் செய்யும் ஆட்சி என்ன?. அதற்கு கொஞ்சம் கூட குறையாத பாசிச ஆட்சித்தானே. மக்கள் விரோத ஆட்சியை, மன்னராட்சி போல செய்கிறார்கள். கேள்வி கேட்டால் கோபம் வருகிறது.. விமர்சித்தால் மட்டும் கோபப்படுகிறார் முதல்-அமைச்சர். உங்கள் ஆட்சிக்கு பெண்கள் முடிவு கட்ட போகிறார்கள். பொண்ணுங்களுக்கு நடக்குற கொடுமைகளை சொல்ல முடியல சார்... இதுல உங்கள அப்பானு சொல்றோம்னு வேற சொல்றீங்க...

உங்க கொடுமைகளை அனுபவிக்கும் என் சகோதரிகள்தான் உங்க அரசியலுக்கும், ஆட்சிக்கும் முடிவு கட்டப்போகிறார்கள்.

திமுக ஓட்டுக்காக காங்கிரஸோடு தேர்தல் கூட்டணி அமைத்துள்ளது. கொள்ளையடிக்க மறைமுகமாக பாஜகவோடு கூட்டணி வைத்துள்ளது.

பரந்தூர் போராட்டம், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் என பல போராட்டங்கள் சொல்லி கொண்டே போகலாம். இது அனைத்திற்கும் தவெக உடன் நிற்கும். தமிழ்நாடு பிளவுவாத சக்திகளுக்கு எதிரான மண். இதனை நாம் பாத்துக்க வேண்டும்.

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து வரும் செய்திகள் மனவேதனையை தருகிறது. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு இருப்பதாகவே தெரியவில்லை. அதற்கு இந்த கரப்ஷன் கபடதாரி அரசு தான் காரணம். இந்த நிலைமை மாற வேண்டும். அதற்கு இருக்கின்ற ஒரே வழி, இங்கே மக்களாட்சி மலர வேண்டும்.

அது வர வேண்டும் என்றால், இவர்களை மாற்ற வேண்டும். அதனை செய்ய தவெக தொண்டர்கள் மக்களை தினமும் சந்திக்க வேண்டும். அவர்களின் பிரச்சினைகளை கேளுங்கள். அதை தீர்த்தால் நம் மீது நம்பிக்கை வரும். அதன்பின் ஒவ்வொரு வீட்டிலும் தவெக கொடி பறக்கும்.

மாண்புமிகு மோடி ஜீ அவர்களே... என்னமோ உங்க பேரெல்லாம் சொல்ல எங்களுக்கு பயம் மாதிரி சொல்லிடுறீங்க; ஏன் ஜீ... தமிழ்நாடு தமிழர்கள்னாலே அலர்ஜி?.

தமிழ்நாட்டில் இருந்து வரும் ஜி.எஸ்.டி.யை வாங்கிக்கிறீங்க, ஆனா பட்ஜெட்ல நிதியை தரமாட்றீங்க... இங்க உள்ள பிள்ளைகளுக்கு நிதி தராம மும்மொழிக் கொள்கையை திணிக்கிறீங்க. தமிழ் நாட்டிடம் வி ளையாடாதீர்கள் பிரதமர் சார்... பலருக்கு தண்ணி காட்டிய மாநிலம் தமிழ்நாடு.

இதுவரைக்கும் சந்திக்காத வித்தியாசமான தேர்தலை அடுத்த வருடம் தமிழ்நாடு சந்திக்கும். தமிழகத்தில் இரண்டு முனை போட்டிதான். அது தவெக மற்றும் திமுக இடையே தான் என்று அவர் பேசினார்.

தொகுதி மறுவரையறை தேவையில்லை உள்பட

# த.வெ.க. முதல் பொதுக்குழு கூட்டத்தில் 17 தீர்மானங்கள்

**சென்னை, மார்ச் 29-**

இருமொழிக் கொள்கைக்கு ஆதரவு, தொகுதி மறுவரையறை தேவையில்லை உள்பட த.வெ.க. முதல் பொதுக்குழு கூட்டத்தில் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

திருவான்மியூரில் நடைபெறும் த.வெ.க.வின் முதல் பொதுக்குழு கூட்டம் அக்கட்சித் தலைவர் விஜய் தலைமையில் நேற்று நடைபெற்றது. உறுதிமொழியோடு தொடங்கிய கூட்டத்தில் மொத்தம் 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் அக்கட்சியின் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் என மொத்தம் 2,100க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். கட்சி தொடங்கப்பட்ட பின்பு நடைபெறும் முதல் பொதுக்குழு கூட்டம் என்பதால் முன்னேற்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டிருந்தன.

பொதுக்குழு கூட்டத்தில், மாநில அரசுகளுக்கான அதிகாரத்தை பகிர்ந்தளிக்க வேண்டும், இருமொழிக் கொள்கைக்கு ஆதரவு, டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும், பாராளுமன்ற தொகுதி மறுவரையறை தேவையில்லை, சட்டம் - ஒழுங்கு பிரச்சினை, பெண்கள் பாதுகாப்பு , மீனவர்கள் போராட்டத்துக்கு தீர்வு, இலங்கை தமிழர் பிரச்சினைக்கு பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும், சாதிவாரி கணக்கெடுப்புக்கான ஆய்வு நடத்த வேண்டும் உள்பட மொத்த 17 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடந்த ஆண்டுகளில் நடந்த த.வெ.க.வின் கல்வி விருதுகள் வழங்கும் விழாவுக்கு த.வெ.க. தலைவர் விஜய் எப்படி முன்பே வருகை தந்ததாரோ அதே போல், இந்த பொதுக்குழு கூட்டத்துக்கும் காலை 6.30 மணி அளவிலே வருகை தந்து முன்னேற்பாடுகளை பார்வையிட்டார். தொடர்ந்து காலை 10 மணியளவில் வழக்கம் போல் வெள்ளை சட்டையுடன் அரங்குக்கு விஜய் வந்தார். அப்போது அரங்கில் கூடியிருந்த பொதுக்குழு உறுப்பினர்களை பார்த்து கையசைத்தவாறும், கும்பிட்டவாறும் மேடைக்கு வந்தார். உறுப்பினர்களும் த.வெ.க., த.வெ.க என முழக்கமிட்டு விஜய்க்கு வரவேற்பளித்தனர்.

பொதுக்குழு கூட்டத்துக்கான மேடையில் விஜய்யுடன் உறுப்பினர் சேர்க்கை பிரிவு செயலாளர் விஜயலட்சுமி, தலைமை நிலைய செயலாளர் ராஜசேகர், தேர்தல் பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா, த.வெ.க. பொதுச் செயலாளர் என்.ஆனந்த், பொருளாளர் வெங்கட்ராமன், துணைச் செயலாளர் சி.டி.நிர்மல் குமார் உள்ளிட்டோர் இருந்தனர்.

# காவல்துறையின் கைகள் கட்டப்பட்டுள்ளன: த.வெ.க. கூட்டத்தில் ஆதவ் அர்ஜூனா பேச்சு

**சென்னை, மார்ச் 29-**

காவல்துறையின் கைகள் கட்டப்பட்டுள்ளன என்று தவெக பொதுக்குழு கூட்டத்தில் ஆதவ் அர்ஜூனா பேசினார்.

தமிழக வெற்றிக்கழகம் கட்சியின் பொதுக்குழு கூட்டம் நேற்று சென்னையில் நடைபெற்றது. திருவான்மியூரில் உள்ள ராமச்சந்திரா அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் தவெக தேர்தல் பிரசார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜூனா பேசியதாவது:-

விஜய் இனி தளபதி இல்லை-வெற்றி தலைவர். பலமான உள்கட்டமைப்போடு தேர்தல் போருக்கு தயாராகி வருகிறோம். ஊழல் அமைச்சர்கள், ஊழல் குடும்பத்தை தூக்கி எறிய தயாராகி விட்டோம்.அரசியலுக்காக வருமானத்தை விட்டவர் விஜய்.




உங்கள் அரசியல் சம்பாதிக்கும் அரசியல். நாங்கள் ஊழல் செய்து லண்டன் சென்று ஊழல் பணத்தை செலவு செய்யவில்லை.

எம்.ஜி.ஆரை இழிவு செய்ததால்தான் அவரது ஆட்சியில் நீங்கள் வொர்க் பிரம் ஹோமில் இருந்தீர்கள். தி.மு.க.வின் ஒட்டுமொத்த அமைச்சரவையும் ஒய்வுக்கு தயராக வேண்டும். பிரசாத் கிஷோர் வருகை தொடர்பாக தி.மு.க. பொய் பிரசாரம் செய்து வருகிறது. தி.மு.க.விற்காக வேலை பார்க்கிறார் அண்ணாமலை.


அண்ணாமலை மோடிக்கு உண்மையாக இருக்க வேண்டும். தேர்தல் வியூக நிறுவனங்கள் மூலம் தி.மு.க. எதிர்க்கட்சிகளை உடைப்பது குறித்து பல்வேறு வியூகங்களை வகுக்கிறார்கள். தவெகவில் சாதி இல்லை. ஆனால், தி.மு.க.வில் சாதி உள்ளது. அரசியலில் சாதி என்பதை உருவாக்கியதே தி.மு.க.தான். சட்டசபையில் ஜனநாயகம் இல்லை. சட்டசபையில் தி.மு.க. கூட்டணி எம்.எல்.ஏ பேசினால் கூட காட்டுவது இல்லை. 10 மானிய கோரிக்கைகளை ஒரே நாளில் நிறைவேற்றுகிறார்கள் இவ்வாறு அவர் பேசினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




**கா**வல்துறையினருக்கே பாதுகாப்பில்லாத தமிழகத்தில் பொதுமக்கள் எப்படி பாதுகாப்பாக நடமாட முடியும்? எனவே, ஒவ்வொரு கொலை, கொள்ளைச் சம்பவத்திற்கும் காரணம் தேடி நேரத்தை வீணடிக்காமல், குற்றச் சம்பவங்களை தடுப்பதற்கு தேவையான கடுமையான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த வேண்டும்.

**- டி.டி.வி. தினகரன்**




**ம**க்கள் நிம்மதியாக வாழ்வதை உறுதி செய்வதும், சட்டம் - ஒழுங்கை பாதுகாப்பதும் தான் மாநில அரசின் அடிப்படைக் கடமையாகும். அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு பெரும் தடையாக இருப்பது மதுக்கடைகள் தான். எனவே, தமிழ்நாட்டில் மதுக்கடைகளை மூட தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**- அன்புமணி**



**இ**ந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தில் மொத்தமுள்ள 2,730 பணியிடங்களில் 596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்திய அணுசக்தி கழக நிறுவனத்தில் மொத்தமுள்ள 15,088 பணியிடங்களில் 4,343 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்த காலி பணியிடங்களை மத்திய அரசு உடனே நிரப்ப வேண்டும்.

**- ப.சிதம்பரம்**



**ப**குதிநேர ஆசிரியர்களுக்கு பணி நிலைப்பு வழங்குவதால் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.450 கோடி மட்டுமே கூடுதலாக செலவாகும். இதனால் 12 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும். தமிழக அரசு இந்த கோரிக்கையை கனிவுடன் ஆய்வு செய்து பகுதி நேர ஆசிரியர்களை பணி நிலைப்பு செய்ய வேண்டும்.

**- ராமதாஸ்**

# கன்னியாகுமரி மாவட்ட மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஆர்.அழகுமீனா தலைமையில் நடைபெற்றது



**கன்னியாகுமரி.மார்ச்.29-**

கன்னியாகுமரி கலெக்டர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில்,கலெக்டர் ஆர்.அழகுமீனா, தலைமையில், மீனவர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் குளங்களில் மீன் பாசி குத்தகை வழங்கிட கேட்டும், அரசு அறிவிப்புகளை மீனவ மக்களுக்கு உடனுக்குடன் தெரிவித்திட மீனவ கூட்டுறவு சங்கங்களில் கூம்பு வடிவ குழாய் அமைத்து மைக் மூலமாக அறிவிப்பு செய்திட வேண்டும் என்றும் இம்மாவட்டத்தில் புதிய பஞ்சாயத்துக்கள் கடந்த 20 ஆண்டுகாலமாக உருவாக்கபட வில்லை என்றும் பொழிக்கரை, மணக்குடி மீனவ கடற்கரை பகுதிகளில் போர்கால அடிப்படையில் தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட வேண்டும் என்றும், கடலில் விபத்துக்குள்ளாகும் மீனவ மக்களை பாதுகாத்திட கடல் ஆம்புலன்ஸ் திட்டத்தினை இம்மாவட்டத்தில் செயல்படுத்திட வேண்டும் எனவும், குறும்பனை பகுதியில் புதிய துறைமுகம் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் எனவும், வாணியக்குடி முதல் கொச்சி வரை பேருந்து சேவை ஏற்படுத்தித்தர வேண்டும் எனவும், பொது விநியோக கடைகளில் பொது மக்களுக்கு அரிசி விநியோகம் தட்டுபாட்டில் உள்ளது எனவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் தூத்தூரில் அமைத்திட கேட்டும், 2009-ஆம் ஆண்டு பியான் புயலில் காணாமல் போன மீனவர்களுக்கு ரூ.20.00 இலட்சம் நிவாரண தொகையும் குடும்பத்தில் ஒரு நபருக்கு அரசு வேலை அளித்திட கேட்டும், மிடாலம் மீனவ கிராமத்தில் பாதிப்படைந்த தூண்டில் வளைவினை விரைவில் கடல் சீற்றம் துவங்கும் முன் சீரமைத்திட கேட்டும், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைத்திட கேட்டும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, கலெக்டர், உதவி ஆட்சியர், பத்மநாபபுரம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) கன்னியாகுமரி மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களால் பதில் விவரம் தெரிவிக்கப்பட்டது. பிற மாவட்டங்களில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கட்டுப்பாட்டில் உள்ள குளங்களில் உள்நாட்டு மீனவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மீன்பாசி குத்தகை வழங்கிட அரசாணை பெறப்பட்டுள்ளது எனவும் நீர்வளத்துறை மற்றும் பிற துறை கட்டுப்பாட்டிலுள்ள குளங்களை குத்தகை விடுவது தொடர்பாக அரசாணை பெறப்பட வில்லை எனவும் அரசு அறிவிப்புகளை மீனவ மக்களிடம் உடனுக்குடன் தெரிவித்திட துண்டு பிரசுரங்கள் மூலமாகவும், நடைபெறும் கிராமசபை கூட்டங்கள் வாயிலாக மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை திட்டங்களை தெரிவித்திடவும், மீனவ கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக கூம்பு வடிவ குழாய் அமைத்து மைக் மூலமாக அறிவிப்பு செய்திடவும் உதவி இயக்குநர் அலுவலகம் வாயிலாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், இம்மாவட்டத்தில் புதிய பஞ்சாயத்துக்கள் உருவாக்கிட வட்டார அளவில் குழுக்கள் அமைத்து கருத்து கேட்பு கூட்டம் நடத்தப்பட்டு கருத்துகளை பதிவு செய்து பின்னர் உரிய கருத்துருக்கள் சமர்ப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் பொழிக்கரை, மணக்குடி பகுதிகளில் தூண்டில் வளைவுகள் அமைத்திட அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு அரசாணை பெறப்பட்ட பின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், கடலில் விபத்துக்குள்ளாகும் மீனவ மக்களை காத்திட கடல் ஆம்புலன்ஸ் திட்டத்திற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது எனவும் குறும்பனை பகுதியில் துறைமுகம் அமைத்திட ரூ1.00 கோடி மதிப்பீட்டில் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கடலோர ஒழுங்கு முறை மண்டலத்தின் ஒப்புதலுக்கு பின் திட்டம் நிறைவேற்றப்படும் எனவும், வாணியக்குடி முதல் கொச்சி வரை பேருந்து சேவை செய்திட சாத்திய கூறுகளை ஆய்ந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் பொது விநியோக கடைகளில் விநியோக பொருட்கள் தட்டுபாடின்றி வழங்கப்படுவதை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது எனவும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகம் தூத்தூரில் அமைத்திட கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு, அரசாணை பெறப்பட்டபின் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், 2009-ஆம் ஆண்டு பியான் புயலில் காணாமல் போன மீனவர்களுக்கு ரூ.20.00 இலட்சம் நிவாரண தொகையும் குடும்பத்தில் ஒரு நபருக்கு அரசு வேலை அளித்திடவும் பரிந்துரையுடன் கூடிய விரிவான கருத்துரு அனுப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மிடாலம் மீனவ கிராமத்தில் பாதிப்படைந்த தூண்டில் வளைவினை சீரமைத்திட ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் கருத்துரு சமர்ப்பித்து நடவடிக்கையில் உள்ளது எனவும், ஆசாரிபள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனையில் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் அமைத்திட, உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தில் கருத்துரு சமர்ப்பித்து நடவடிக்கையில் உள்ளது எனவும் பதில் விபரம் தெரிவிக்கப்பட்டது.

நடைபெற்ற கூட்டத்தில் பத்மநாபபுரம் உதவி ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர் கோவில் வருவாய் கோட்டாசியர் செல்வி.எஸ்.காளீஸ்வரி, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் (மண்டலம்) சின்னகுப்பன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர்கள் நாகர்கோவில் (இ) குளச்சல், குளச்சல் (இ) தேங்காய்பட்டணம், கன்னியாகுமரி (இ) சின்னமுட்டம், செயற்பொறியாளர், மீன்பிடி துறைமுக திட்ட கோட்டம், பிறதுறை அலுவலர்கள் மற்றும் மீனவ பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தென்காசி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது



**தென்காசி மார்ச்.29:**

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர்;, தலைமையில் நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்ததாவது,

தென்காசி மாவட்டத்தில் 2024 - 2025 ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரை ஒத்திசைவு சாகுபடி செய்யப்பட்ட நெல் - 44446 ஹெக்டேர், சிறுதானியங்கள் - 24255 ஹெக்டேர், பயறு வகைகள் - 29521 ஹெக்டேர் பருத்தி - 1922, கரும்பு - 1389 ஹெக்டேர், எண்ணெய் வித்து - 1656 ஹெக்டேர், மலைப் பயிர்கள்- 13870 ஹெக்டேர், பழங்கள் - 10094 ஹெக்டேர், காய்கறிகள் - 2054 ஹெக்டேர், வாசனைப் பயிர்கள் - 715 ஹெக்டேர், மருத்துவப் பயிர்கள் - 3 ஹெக்டேர், பூக்கள் - 536 ஹெக்டேர் பரப்பும் ஒத்திசைவு செய்யப்பட்டது. மழையளவு, நீர் இருப்பு விபரம் மற்றும் இடுபொருட்கள் இருப்பு விபரம் அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும், தென்காசி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள எண் வழங்கிடும் பொருட்டு கிராம அளவில் முகாம்கள் நடத்தப்பட்டு வருவதையும் அதில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்களின் நிலவுடமை விபரங்களை பதிவு செய்திட வேண்டுமெனவும் விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார்.

வேளாண்மைத் துறை சார்பில் ஆலங்குலம் வட்டார வேளாண்மைத் துறையினர் மூலம் முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.2538 மானியத்தில் மண்புழு உரப் படுக்கையினையும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு இயக்கம் பயறு வகைகள் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு ரூ.352 மானியத்தில் பயறு நுண்ணூட்ட உரத்தினையும், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறையினர் மூலம் ஒரு பயனாளிக்கு ரூ.8800 மானியத்தில் கொய்யா பரப்பு விரிவாக்கத்தினையும், தமிழ்நாடு நீர்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத் துறையினர் மூலம் ஒரு பயனாளிக்கு ரூ.10000 மானியத்தில் வெண்டைக்காய் பரப்பு விரிவாக்கத்திற்கான இடுபொருட்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர்; ஏ.கே.கமல் கிஷோர்;, வழங்கினார். குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 198 மனுக்களுக்கு 15 நாட்களுக்குள் விரிவான மற்றும் விவசாயிகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலை வழங்குமாறு அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்; ஏ.கே.கமல் கிஷோர்;, அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வன அலுவலர் அகில் தம்பி, அம்பாசமுத்திரம் வனக்கோட்ட துணை இயக்குநர் இளையராஜா., மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் மகாதேவன், வேளாண்மை துணை இயக்குநர்ஃமாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவ) கனகம்மாள், வேளாண்மை துணை இயக்குநர்(மத்திய மற்றும் மாநிலத் திட்டம்) பிரபாகரன், துணை இயக்குநர், வேளாண் வணிகம் மற்றும் விற்பனை வசந்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்ணான்டோ, வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் சங்கர், முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் ரியாஜ் அகமது, கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் நரசிம்மன் மற்றும் அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்கள், அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள், அனைத்து துறை அலுவலர்கள், அனைத்து விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாய பெருமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



**தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**




**திருச்செந்தூர் வட்டம் மணப்பாடு கடற்கரைப் பகுதியில் வனத்துறை சார்பில் நடைபெற்ற ஆமைக் குஞ்சுகள் கடலில் விடும் நிகழ்ச்சியில் கடலில் மீன் பிடிக்கும்போது எதிர்பாராத விதமாக மீன்பிடி வலையில் சிக்கும் ஆமைகளை மீட்டு மீண்டும் கடலில் விட்டு தன்னார்வ பணிகளை மேற்கொண்டமைக்காக மீனவர்களுக்கு தலா 5000 ரூபாய் ரொக்கப் பரிசுகளை கலெக்டர் க.இளம்பகவத் வழங்கி பாராட்டினார்.. இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) இரா.ஐஸ்வர்யா, மாவட்ட வன அலுவலர் ரேவதி ராமன் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமாறன் கலந்துகொண்டனர்.**



**கோவில்பட்டி நகர்மன்ற கூட்டம் சேர்மன் கா.கருணாநிதி தலைமையில் ஆணையாளர் கமலா முன்னிலையில் நடந்தது. பொறியாளர் தவமணி, கவுன்சிலர்கள் ராமர், முத்துலட்சுமி பூல் பாண்டியன், முத்துப்பாண்டியன், ஜாஸ்மின் லூர்து மேரி அமலி அந்தோணி பிரகாஷ், ஏஞ்சலா சின்னத்துரை, சீனிவாசன், ஜோதி பாசு, உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர் அனைத்து தீர்மானங்களும் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.**



**திருச்செந்தூர் அருள்மிகு செந்திலாண்டவர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை கலெக்டர்க.இளம்பகவத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

திருநெல்வேலி மாவட்டத்தில்

# கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் மூலம் ரூ.4 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் இரா.சுகுமார் வழங்கினார்




திருநெல்வேலி,,மார்ச்.29-

சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த கிறித்தவ சமூக மகளிருக்கு பொருளாதார ரீதியில் உதவும் வகையில் கிறித்தவ மகளிர் உதவும் சங்கம் என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மேற்கண்ட சங்கத்தின் பதவி வழி தலைவராகவும், திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்) பதவி வழி உப தலைவராகவும், மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் பதவி வழி பொருளாளராகவும், ஒரு கௌரவ செயலாளர். 2 கௌரவ இணை செயலாளர்கள் மற்றும் 3 உறுப்பினர்களையும் கொண்டு இச்சங்கம் இயங்கி வருகின்றது.

திருநெல்வேலி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், இன்று (28.03.2025) இச்சங்கத்தின் மூலம் கிறித்தவ மகளிர் உதவும் சங்க கௌரவ செயலாளர் மற்றும் இணைச் செயலாளரால் பரிந்துரை செய்யப்பட்ட ஏழ்மை நிலையில் உள்ள விதவை, கணவனால் கைவிடப்பட்டோர், முதியோர்கள் மற்றும் ஏழை மாணவியர்களுக்கு என 40 நபர்களுக்கு உதவித் தொகை தலா ஒருவருக்கு ரூ.10000/- வீதம் ரூ.4,00,000/- மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா. சுகுமார், வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர்(பொது) அனிதா மற்றும் கிறித்தவ மகளிர் உதவும் சங்க கௌரவ செயலாளர் திருபிரான்சிஸ் சேவியர், கௌரவ இணைச் செயலாளர் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சுற்றுச்சூழல் ஆர்வலருக்கு பசுமை நாயகன் விருது

**திருச்செந்தூர் மார்ச்.29-**

நாட்டின் பசுமை போர்வையை மேம்படுத்தி,சுற்றுச்சூழலை பாதுகாப்பதிலும், தமிழகத்தின் மாநில மரமான கற்பக விருட்சம் என்று போற்றப்படும் பனை மரங்களை

மீட்டெடுக்கும் வகையிலும், நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கில் நீர் நிலைகளில் பல லட்சம் பனைவிதைளை வருடந்தோறும் நடவு செய்துவரும் தன்னார்வ அமைப்பு தமிழ்நாடு பனைமரங்கள் பாதுகாப்பு கூட்டமைப்பு ஆகும்.

மேலும் தமிழக முதல்வரின் பசுமை தமிழ்நாடு இயக்கத்திற்கு வலுசேர்க்கும் விதமாக பள்ளி கல்லூரி வளாகங்கள், அரசு அலுவலக வளாகங்கள் என பல இடங்களில் பல ஆயிரம் மரக்கன்றுகளை நடவு செய்து பராமரித்து வரும் தமிழ்நாடு பனைமரங்கள் பாதுகாப்பு கூட்டமைப்பை கௌரவிக்கும் விதமாக அதன் தலைவர் எம்.ஏ. தாமோதரனுக்கு நேற்று தூத்துக்குடி டிஎஸ்எப் கிராண்ட் பிளாசாவில் வைத்து தூத்துக்குடி நாசரேத் திருமண்டல லே செயலாளர் டி.நீகர் பிரின்ஸ் கிப்ட்சன் பசுமை நாயகன் என்னும் விருது மற்றும் சான்றிதழை வழங்கி பாராட்டுக்களை தெரிவித்தார்.

செங்கோட்டை-தாம்பரம் இடையே

# சிலம்பு எக்ஸ்பிரஸ் ரயில் தினசரி சேவை ரயில்வே அமைச்சரிடம் தென்காசி எம்.பி. ராணி ஸ்ரீகுமார் வலியுறுத்தல்



**சங்கரன்கோவில், மார்ச் 29-**

செங்கோட்டை - தாம்பரம் இடையே சிலம்பு விரைவு ரயிலை தினசரி இயக்கும் வகையில் அறி முகப்படுத்த வேண்டும் என்று ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் தென்காசி தொகுதி திமுக எம்.பி. டாக்டர்ராணி ஸ்ரீகுமார் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தில்லியில் மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிடம் அவர் அளித்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது செங்கோட்டை மற்றும் தாம்பரம் இடையே சிலம்பு விரைவு ரயில் (எண்.20681/20682) தினசரி சேவை அறிமுகப்படுத்த வேண்டும். கோவை முதல் மதுரை வரை இயக்கப்படும் மதுரை இன்டர்சிட்டி விரைவு ரயிலை (வண்டி எண். 16721) செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டும். கொல்லம் விரைவு ரயிலுக்கு (வண்டி எண். 16101/16102) பாம்புகோவில் சந்தையில் நின்று செல்ல அனுமதி அளிக்க வேண்டும். தாம்பரம் செங்கோட்டை (வண்டி எண். 20683) விரைவு ரயிலை கொல்லம் வரை நீட்டிக்கப்பட வேண்டும்.

அதிகரித்து வரும் பயணிகளின் பயன்பாட்டை ஈடுசெய்யும் வகை யில் செங்கோட்டை ரயில் நிலை யத்தில் புதிதாக 5 மற்றும் 6 நடைமேடைகளை கட்டவும், ரேக்குகள் பராமரிப்புக்காக செங்கோட்டையில் ஒரு புதிய ஃபிட்லைனை அமைக்கவும் வேண்டும்.

சோழபுரம், கரிவலம்வந்தநல்லூர் மற்றும் நயினாரகரம் (ஹால்ட்) ஆகிய இடங்களில் முன்னர் மூடப்பட்ட நிலையங்களை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த மனுவில் எம்.பி. டாக்டர் ராணி ஸ்ரீகுமார் கோரிக்கைவிடுத்துள்ளார். மனுவை பெற்றுக் கொண்ட மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

**மழைநீர்
உயிர்நீர்**

# புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி திருமணஞ்சேரி ஊராட்சியில் உள்ள பெரியநாயகி அம்பாள் உடன் பரிமளேஸ்வரர் ஆலயத்தில் ரூ.6.70 கோடி செலவில் திருமண மண்டபம் கட்டப்பட்டு வருகிறது

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

சென்னை,மார்ச்29

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று வினா - விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்பி. கே.சேகர்பாபு புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார். அப்போது அவர் கூறியதாவது

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா புதுக்கோட்டை தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், கருப்பட்டிப்பட்டி ஊராட்சி, ஆயிப்பட்டி கிராமத்தில் உள்ள கூத்தாயி அம்மன் கோயில் குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா ?அமைச்சர்- உறுப்பினர் அவர்கள் கூறிய கூத்தாயி அம்மன் திருக்கோயிலுக்கு 35 ஆண்டுகளுக்கு முன்பு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. தற்போது மண்டல குழு, மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறப்பட்டு, வரைபடம் தயாரிக்கின்ற பணி நடைபெற்று வருகின்றது. வெகு விரைவில் ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் துவக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா- புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு அரசு மானியம் கடந்த ஆட்சியில் ஒரு கோடியாக இருந்ததை திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு மூன்று முறை உயர்த்தி ரூ.8 கோடியாக வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கருப்பட்டிப்பட்டி ஊராட்சி ஆயிப்பட்டியிலுள்ள அருள்மிகு கூத்தாகி அம்மன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட அனுமதி வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலை துறை அமைச்சர் அவர்களுக்கும் கிராம பொதுமக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், புதுக்கோட்டை மாநகராட்சி, வார்டு எண் 7–ல் அடப்பன்வயல் பகுதியில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான மிகவும் பழமை வாய்ந்த சிங்கமுத்து அய்யனார் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா என்றும், புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் இருக்கின்ற கோயில்கள் எண்ணிக்கை எத்தனை? அந்த திருக்கோயில்களில் நித்திய பூஜைகள் நடத்த அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர்-உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு சிங்கமுத்து அய்யனார் திருக்கோயில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்திருக்கோயிலுக்கு 02.07.2025 அன்று குடமுழுக்கு நடத்த தேதி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே குடமுழுக்கு அன்றைய தினம் நடைபெறும். அவர் கூறிய புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் 225 திருக்கோயில்கள் இருக்கின்றன. ஆண்டு வருமானம் மிக குறைவாகும். ஆனால் இந்த திருக்கோயில்களில் 4 திருக்கோயில்களை தவிர்த்து, இதர திருக்கோயில்களுக்கு உண்டியல் வருமானம் கூட இல்லை. 225 திருக்கோயில்களில் 63 திருக்கோயில்களில் மட்டுமே உண்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு ஆண்டிற்கு ஒரு கோடி ரூபாய் மானியம் என்று இருந்ததை படிப்படியாக உயர்த்தி இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 19 கோடி ரூபாய் அளவிற்கு மானியத்தை உயர்த்தி தந்து திருக்கோயில்களின் இருள் அகல ஒளி வீச செய்தவர் முதலமைச்சர் திராவிட மாடன் நாயகன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டும் கூடுதலாக மானியத்தை கேட்டிருக்கின்றோம். 573 பணியாளர்கள் இருக்கின்றார்கள். பணியாளர்களின் சம்பளம் கூட ரூ. 500 மற்றும் ரூ. 1000 என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 19 கோடி ரூபாய் அரசு மானியம் உயர்த்தியதால் இன்றைக்கு பத்தாயிரம் ரூபாய் வரையில் சம்பளம் பெறுகின்ற ஒரு நல்ல சூழ்நிலை ஏற்பட்டு இருக்கின்றது. அனைத்து திருக்கோயில்களையும் தொடர்ந்து சிறந்த முறையில் பராமரிக்க இந்த ஆண்டும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மானியத்தை உயர்த்தி தருவதாக கூறியிருக்கின்றார் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா-, புதுக்கோட்டை அருள்மிகு விட்டோவா பெருமாள் கோயிலில் திருமண மண்டபம் கட்டுவதற்கு ரூ.6.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி கறம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட திருமணஞ்சேரி ஊராட்சியில் உள்ள பெரியநாயகி அம்பாள் உடன் பரிமளேஸ்வரர் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. இக்கோயிலின் சிறப்பு அம்சங்கள் திருமணம் ஆகாத ஆண்கள் மற்றும் பெண்கள் இந்த ஆலயத்தில் தரிசனம் செய்தால் விரைவில் திருமணம் ஆகும் என்பது ஐதீகம். நம் அண்டை மாநிலத்திலிருந்தும் பிற மாவட்டங்களில் இருந்தும் தரிசனம் செய்ய தினசரி 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து செல்கின்றனர். மேலும் இக்கோயிலின் சுப முகூர்த்த நாட்களில் மட்டும் மாதத்திற்கு 20 முதல் 25 திருமணங்கள் நடைபெறுகின்றன. மேற்கண்ட கோயிலுக்கு சொந்தமான இடம் உள்ளதால் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் ஒப்புதல் பெற்று நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து ஒரு புதிய திருமண மண்டபத்தை கட்டி தரவும், இக்கோயிலுக்கு சொந்தமான குளத்தை சுத்தம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொண்டிடவும் அரசு முன்வருமா என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் - சுகந்த பரிமளேஸ்வரர் திருக்கோயில் என்பது திருமண பரிகார தலமாகும். ஒவ்வொரு முகூர்த்தத்திற்கும் குறைந்தது 10 லிருந்து 15 திருமணங்கள் நடைபெறுகின்றன. அதை கருத்தில் கொண்டு தான் அதே தொகுதியில் அமைந்துள்ள மற்றொரு திருக்கோயிலான விக்டோபா திருக்கோயிலில் ரூ.6.70 கோடி செலவில் திருமண மண்டபம் கட்டப்பட்டு வருகிறது. பரிமளேஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான நிலமும் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. முதலமைச்சர் மேலான அனுமதியோடு வருகின்ற மானியக் கோரிக்கையில் திருமண பரிகார தலமான அந்த திருக்கோயிலிலும் திருமண மண்டபம் கட்டப்படுவதற்கு அறிவிப்பு வெளியிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

# சொந்த வாகனங்களை வாடகைக்குப் பயன்படுத்தும் நபர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உரிமைக்குரல் ஓட்டுநர் சங்கம் கோரிக்கை



கோவில்பட்டி மார்ச் 29

கோவில்பட்டி வட்டார போக்குவரத்து அலுவலரிடம் கோவில்பட்டி உரிமை குரல் ஓட்டுநர் தொழிற்சங்கம் சார்பில் கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது. அதில் கூறியுள்ளதாவது

கோவில்பட்டி பகுதியில் சொந்தமாக வாகனம் வைத்திருப்பவர்கள் வாடகைக்கு அதை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அரசுக்கு அதிக அளவில் நஷ்டம் ஏற்படுகிறது.

வாடகை வாகன உரிமையாளர் ஆகிய நாங்கள் முறையாக தகுதி சான்றிதழ் வாகன வரி இன்சூரன்ஸ் ஆகியவை செலுத்துகிறோம்

ஆனால் அரசுக்கு எந்த பணமும் கட்டாமல் சொந்த வாகனங்களை சிலர் பயன்படுத்துவதால் அரசுக்கு பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவது உடன் எங்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே தயவு செய்து வாடகைக்கு பயன்படுத்தப்படும் சொந்த வாகனங்கள் கண்டறியப்பட்டு உடனடியாக வாகனங்களை பறிமுதல் செய்ய வேண்டும் மேலும் ஆன்லைன் மூலம் எங்களுக்கு அதிக வரி செலுத்தும் நிலை ஏற்படுகிறது அதையும் சரி செய்ய வேண்டும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். வட்டார போக்குவரத்து அலுவலர் கிரிஜாவிடம் சங்க தூத்துக்குடி மாவட்ட செயலாளர் ரவிந்திரன் மாவட்ட பொருளாளர் விக்னேஷ் செல்வின் மாநில செய்தி தொடர்பாளர் வேல்முருகன் உட்பட சங்க நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

# இலஞ்சி பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரமலான் பண்டிகை கொண்டாட்டம்



குற்றாலம் மார்ச்.29-

இலஞ்சி பாரத் பாண்டிச்சேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ரமலான் பண்டிகை மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியானது இறைவணக்க பாடலுடன் தொடங்கியது. கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் தலைமை வகித்தார். பள்ளி முதல்வர் பாலசுந்தர் முன்னிலை வகித்தார் . மழலையர் பிரிவில் பயிலும் மாணவர்கள் அப்துல் ரிஸான் மற்றும் நூருல்லா சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர் .

கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் சிறப்பு விருந்தினர்களுக்கு பரிசுகள் வழங்கி கௌரவித்தார். ஐந்தாம் வகுப்பு மாணவிகள் பிரதிக்ஷா மற்றும் சுபிக்ஷா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். விழாவில் மழலையர் பிரிவு முதல் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவ -மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

மாணவன் ராகுல் வரவேற்புரையாற்றினார். மாணவி மிருதுளா ஜனனி ரமலான் நோன்பு மற்றும் பண்டிகையைப் பற்றி சிறப்புரையாற்றினார். ஆறாம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியர்கள் ரமலான் தொழுகை பற்றிய மௌன நாடகம் நடித்துக் காண்பித்தார்.

மழலையர் பிரிவு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்கள் அனைவரும் இஸ்லாமிய பாரம்பரிய ஆடையை அணிந்து அணிவகுத்து வந்தனர். ஐந்தாம் வகுப்பு மாணவன் ஜீவா நன்றியுரையாற்றினார். இறுதியாக கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ் மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து மாணவ - மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இனிப்புகளை வழங்கினார். விழா இனிதே நிறைவுற்றது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், கல்வி ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர், துணை முதல்வர் செல்வலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர்.



சென்னை ஐ.சி.எப்.பகுதியில் கொலை வழக்கை சிறந்த முறையில் புலன் விசாரணை செய்து எதிரிகளுக்கு ஆயுள் தண்டனை பெற்று தந்த உதவி கமிஷ்னர் இளங்கோவனுக்கு காவல்ஆணையர்ஆ.அருண்பாராட்டிவெகுமதிவழங்கினார்.

# தமிழ் ஒளி விளையாட்டுக் கழகம் கிட்ஸ் தடகளப் போட்டி: சுரண்டை எஸ்..ஆர். பள்ளி சாதனை



சுரண்டை மார்ச்.28:

தமிழ் ஒளி விளையாட்டுக் கழகம் சார்பில் ஆலங்குளம் ஜீவா மாண்டிசோரி மெட்ரிக் பள்ளி மைதானத்தில் கிட்ஸ் தடகளப் போட்டி நடைபெற்றது. ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவ மாணவியர் இப்போட்டியில் பங்கேற்றனர். இப்போட்டியில் கலந்து கொண்ட எஸ் ஆர் பள்ளி ஐந்தாம் வகுப்பு மாணவர் சிவதர்ஷன் நீளம் தாண்டுதலில் முதலிடமும்; ஐந்தாம் வகுப்பு மாணவி லிங்கிதா குண்டு எறிதலில் முதலிடமும்; நான்காம் வகுப்பு மாணவி சஸ்மிகா பந்து எறிதலில் இரண்டாமிடமும் பெற்று சாதனை படைத்தனர். வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு சான்றிதழ் மற்றும் வெற்றிக் கோப்பை வழங்கப்பட்டது. தடகளப் போட்டியில் வெற்றி பெற்ற எஸ் ஆர் பள்ளி அணியினரை குழல்வாய்மொழி அம்மாள் சிவன் நாடார் அறக்கட்டளை நிறுவனர் சிவபபிஸ்ராம் , பள்ளியின் செயலர் சிவடிப்ஜினிஷ்ராம் , பள்ளி முதல்வர்கள் பொன்மனோன்யா மற்றும் புஷ்பா தலைமையாசிரியர் மாரிக்கனி ஆகியோர் பாராட்டினர். உடற்கல்வி ஆசிரியர் கோபால் மாணவ மாணவியரை ஒருங்கிணைத்தார்

வாகனங்கள் ஓட்டும்
போது செல்போன்
பேசாதே...
பேசுவது எமனாக
இருக்கலாம்

# மத்திய அரசை கண்டித்து தென்காசி தெற்கு மாவட்டத்தில் 11 இடங்களில் இன்று திமுக சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்

## மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் அறிக்கை



தென்காசி மார்ச்.29-

மத்திய அரசை கண்டித்து தென்காசி தெற்கு மாவட்டத்தில் 11 இடங்களில் திமுக கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (மார்ச் 29) நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின், இளைஞரணி செயலாளரும், துணை முதல்வருமான உதயநிதிஸ்டாலின் ஆகியோர் அறிவுறுத்தலின் பேரில், தென்காசி தெற்கு மாவட்ட திமுக சார்பில் 100 நாள் வேலை உறுதி திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய நிதி ரூ.4034 ஐ வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் மத்திய அரசை கண்டித்து தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றியங்களில் நாளை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

அதன்படி தென்காசி கிழக்கு ஒன்றியம் சார்பில் குத்துக்கல்வலசை ஐ.டி.ஐ. முக்கில் மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், மேற்கு ஒன்றியம் சார்பில் பிரானூர் பார்டரில் மாவட்ட அவைத்தலைவர் சுந்தரமகாலிங்கம், கீழப்பாவூர் மேற்கு ஒன்றியம் சார்பில் பாவூர்சத்திரத்தில் மாவட்ட துணை செயலாளர் கனிமொழி, பாப்பாக்குடி ஒன்றியம் சார்பில் பாப்பாக்குடி பேருந்து நிறுத்தம் அருகில் மாவட்ட துணை செயலாளர் கென்னடி, கடையம் வடக்கு ஒன்றியம் சார்பில் ஏ.பி.நாடானூரில் மாவட்ட துணை செயலாளர் தமிழ்செல்வன், கடையம் தெற்கு ஒன்றியம் சார்பில் கடையத்தில் மாவட்ட பொருளாளர் எம்.ஏ.எம்.ஷெரீப், செங்கோட்டை ஒன்றியம் சார்பில் புளியரையில் செயற்குழு உறுப்பினர் முத்துப்பாண்டி, ஆலங்குளம் தெற்கு ஒன்றியம் சார்பில் ஆலங்குளத்தில் செயற்குழு உறுப்பினர் சேக்தாவூது, ஆலங்குளம் வடக்கு ஒன்றியம் சார்பில் ஊத்துமலையில் செயற்குழு உறுப்பினர் ஜேசுராஜன், கடையநல்லூர் ஒன்றியம் சார்பில் நயினாகரத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர் செல்லத்துரை, கீழப்பாவூர் கிழக்கு ஒன்றியம் சார்பில் அத்தியூத்தில் செயற்குழு உறுப்பினர் ஆறுமுகசாமி ஆகியோர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த பகுதி மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்து கொள்ளும் படி தெரிவித்துள்ளார்.

---

மாண்புமிகு சிறப்பு மாவட்ட நீதிமன்றம், மதுரை.
(FOR M.C.O.P.CASES)
M.C.O.P.No: 1303/2024

1. P.பெருமாள்சாமி, த/பெ.ரெங்கசாமி, எண்.4/146, கிழக்கு தெரு. புதுப்பட்டி, வவ்வால் தொத்தி, தூத்துக்குடி.
2. வரதராஜ், த/பெ.பெருமாள்சாமி, எண்.6/220, சுப்புலாபுரம், சிவலார்பட்டி, தூத்துக்குடி.

---- மனுதாரர்கள்

--- எதிரிடை ---

S.சுப்புராஜ், த/பெ.சங்கரலிங்கம், எண்.30, ஸ்டாலின் காலனி, கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்-628501.

--- 1-ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரர்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்திருக்கும் இந்த வழக்கில் மேற்படி 1-ம் எதிர்மனுதாரர் ஆஜராக 28.04.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

A.செல்வராஜ்,B.Sc.,B.L.,
வழக்கறிஞர், தூத்துக்குடி.

---

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

மு.வைரமுத்து, த.பெ. முனியசாமி, க.எண். 25, கோட்டைதெரு, அழகாபுரி, திருவேங்கடம் வட்டம்.

மனுதார்,

1. வட்டாட்சியர், திருவேங்கடம்,
2. சார் பதிவாளர், கரிவலம் வந்தநல்லூர்,

எதிர்மனுதாரர்,

அறிவிப்பு

எனது தந்தை முனியசாமி, த.பெ. முத்தையா தேவர், என்பவர் கடந்த 16.01.2016 அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்து கொள்ள வேண்டும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

மு. வைரமுத்து,
அழகாபுரி.

---

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி

ஜெயமணி, கபெ. கருப்பசாமி, 3/4, கிழக்குத் தெரு, பூசாரிபட்டி கிராமம், இலுப்பை யூரணி பஞ்சாயத்து, கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார் பதிவாளர், கோவில்பட்டி.

எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது மகள் தீர லட்சுமி தபெ. கருப்பசாமி என்பவர் கடந்த 19.04.1996. அன்று மேற்படி முகவரி வைத்து பிறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் பிறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
ஜெயமணி,
மனுதார்,

---

கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி

ராஜேஸ்வரி, கபெ. முருகன், 20, அம்மன் நகர், சரவணம் பட்டி, கோயமுத்தூர் வடக்கு, கோயமுத்தூர்.

மனுதாரர்

எதிர்

வட்டாட்சியர், கயத்தார்.
சார் பதிவாளர், கழுகுமலை.

எதிர்மனுதாரர்கள்

அறிவிப்பு

எனது கணவர் முருகன் தபெ. ராமையா என்பவர் கடந்த 17.07.2017 அன்று 4/418, கரடிகுளம், CR. காலனி , கயத்தார் தாலுகா தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரர்கள் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்து மூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இப்படிக்கு
ராஜேஸ்வரி,
மனுதார்,

---

வருவாய் கோட்டாட்சியர் நடுவர் மன்றம், திருச்செந்தூர்

இ.குமராண்டி, த/பெ. இருளப்பன், கதவு எண். 15/43, மேலத்தெரு, தட்டார்மடம், நடுவக்குறிச்சி கிராமம், சாத்தான்குளம் வட்டம் தூத்துக்குடி மாவட்டம்.

மனுதாரர்

எதிர்

வருவாய் கோட்டாட்சியர் திருச்செந்தூர்.

எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் மனைவி கு.ராஜலட்சுமி, க/பெ.குமராண்டி தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வட்டம், நடுவக்குறிச்சி கிராமம், தட்டார்மடம், மேலத்தெரு, கதவு எண். 15/43 என்ற முகவரியில் வைத்து 30.04.2021 தேதியன்று காலம் சென்று விட்டார். அன்னாரின் இறப்பை கவலையினாலும், கவனக்குறைவினாலும் அரசுத்துறை பதிவேடுகளில் பதிவு செய்யத் தவறியதால் மேற்படி இறப்பை பதிவு செய்ய வேண்டி திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது ஆட்சேபனை உள்ளவர்கள் திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி உங்கள் ஆட்சேபனை தெரிவித்து கொள்ளுமாறு இதன்மூலம் தெரிக்கப்படுகிறது.

இ.குமராண்டி,
மனுதாரர்

---

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்காசி
RDOTKS
இ.ப.வ. எண்.9/2025
நாள்-26.03.2025

அனுப்புநர்
E. வீரமணி, த/பெ. இசக்கி
11-2, அம்பேத்கார் நகர்
பேட்டை- 627004
திருநெல்வேலி மாவட்டம்

— மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் E.வீரமணி என்பவரின் அண்ணன் மாரிச்செல்வம் என்பவர் கடந்த 27.05.2016-ம் தேதியன்று சிவலார்குளம், கரும்புளியூத்து அருகில், ஆலங்குளம் தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்தார் என்றும், தனது அண்ணனின் இறப்பினை தங்களது அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது அண்ணனின் இறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
E. வீரமணி

---

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்காசி
RDOTKS
இ.ப.வ. எண்.10/2025
நாள்-26.03.2025

அனுப்புநர்
செ. வரதன், த/பெ. செல்லத்துரை
6/86, அம்பேத்கர் தெரு
புதுப்பட்டி ,ஆலங்குளம் தாலுகா
தென்காசி மாவட்டம்

— மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் செ.வரதன் என்பவரின் அக்கா செ. தனம் என்பவர் கடந்த 20.07.1995-ம் தேதியன்று கதவு எண்.6/86, அம்பேத்கார் தெரு, புதுப்பட்டி, ஆலங்குளம் தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்தார் என்றும், தனது அக்காவின் இறப்பினை தங்களது அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது அக்காவின் இறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
செ. வரதன்

---

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்காசி
RDOTKS
இ.ப.வ. எண்.54/2025
நாள்-26.03.2025

அனுப்புநர்
K. திருவண்ணாமலை
க/பெ. கிருஷ்ணன்
9/1, நடுத்தெரு
மேலக்கடையநல்லூர்- 627851
கடையநல்லூர் தாலுகா
தென்காசி மாவட்டம்

— மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் K. திருவண்ணாமலை என்பவரின் தாயார் குருவம்மாள் என்பவர் கடந்த 10.04.1976-ம் தேதியன்று கதவு எண்.78-A/1, கிருஷ்ணன் கோவில் வடக்கு தெரு, மேலக்கடையநல்லூர்-627 851, கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து இறந்தார் என்றும், தனது தாயாரின் இறப்பினை தங்களது அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது தாயாரின் இறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி இறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
K. திருவண்ணாமலை

---

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தென்காசி
RDOTKS
பி.ப.வ. எண்.5/2025
நாள்-25.03.2025

அனுப்புநர்
S. சிவநாராயணன், த/பெ. சுப்பையா
36E, வடக்கு தெரு
சிந்துபுந்துரை, ஜங்ஷன் -627001
திருநெல்வேலி மாவட்டம்

— மனுதார்

அறிவிப்பு

மேற்படி மனுதார் S. சிவநாராயணன் என்பவரின் மனைவி S. பழனியம்மாள் என்பவர் கடந்த 19.02.1966-ம் தேதியன்று அழகாபுரிபட்டிணம், சுரண்டை கிராமம் -627859, V.K. புதூர் தாலுகா, தென்காசி மாவட்டம் என்ற முகவரியில் வைத்து பிறந்தார் என்றும், தனது மனைவியின் பிறப்பினை அவரது பெற்றோர்களின் அறியாமையால் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி தனது மனைவியின் பிறப்பினை எந்தவொரு பிறப்பு (ம) இறப்பு பதிவு அலுவலகத்திலும் பதிவு செய்யவில்லை என்றும், மேற்படி பிறப்பினை பதிவு செய்வதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் தென்காசி கோட்டாட்சித் தலைவர் அலுவலகத்தில் நேரில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளுமாறு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மனுதார்
S. சிவநாராயணன்

---

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

---

தமிழ்நாடு அரசு

**விளாப்பாக்கம் முதல்நிலை பேரூராட்சி**
**இராணிப்பேட்டை மாவட்டம்**

ந.க.எண்.10/2025 நாள்: 21.03.2025

**15வது நிதி ஆணையம் 2024–2025**

<u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

இராணிப்பேட்டை மாவட்டம், விளாப்பாக்கம் முதல்நிலை பேரூராட்சியில் 2024–2025ஆம் ஆண்டு 15வது நிதி ஆணையம் திட்டத்தின் கீழ் ரூ.150.00 இலட்சம் மதிப்பீட்டில் விளாப்பாக்கம் பேரூராட்சியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டுதல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் பதிவு பெற்ற மற்றும் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து **16.04.2025 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** (அலுவலக கடிகாரப்படி) இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ–டெண்டரிங் முறையில் மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்களால் திறக்கப்படும்.

**www.tntenders.gov.in** என்ற இணையதளம் மூலம் E-Token / Digital Signature Card உபயோகித்து இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

(ஒம்) கி.அர்ச்சுணன், செயல் அலுவலர்,
விளாப்பாக்கம் பேரூராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம்

செ.ம.தொ.இ/1251/ஒப்பந்தப்புள்ளி/2025

## பி.சி.சி.ஐ.-ன் ஒப்பந்தத்தில்
# மீண்டும் இடம்பெறுகிறார் முன்னணி வீரர் ஸ்ரேயாஸ்?





**மும்பை, மார்ச் 29-**
இந்திய கிரிக்கெட் வீரர்களின் புதிய ஒப்பந்த பட்டியல் விரைவில் வெளியிடப்பட உள்ளது. இதில் முன்னணி வீரர் மீண்டும் இடம் பெறுகிறார்.

**ஒப்பந்த பட்டியல்...**
இந்திய கிரிக்கெட் வாரியமான பி.சி.சி.ஐ., நடப்பாண்டிற்கான வீரர்களின் புதிய ஊதிய ஒப்பந்த பட்டியலை விரைவில் அறிவிக்க உள்ளது. அண்மையில் வீராங்கனைகளின் வருடாந்திர ஒப்பந்த பட்டியலை பி.சி.சி.ஐ. அறிவித்து விட்டது. இதனால் விரைவில் வீரர்களுக்கான ஒப்பந்த பட்டியலை அறிவிக்கும் என்று கூறப்படுகிறது. அந்த வகையில் இதனை முடிவு செய்யும் விதமாக பி.சி.சி.ஐ. ஆலோசனை கூட்டம் கவுகாத்தியில் நாளை நடைபெறுகிறது. இதில் செயலாளர் தேவஜித் சைகியா, தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர், தேர்வு குழு தலைவர் அகர்கர் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளார்கள்.

**மீண்டும் வாய்ப்பு...**
இதில் கடந்த ஆண்டு உள்ளூர் போட்டியில் விளையாட மறுத்ததால் ஒப்பந்தத்தில் இருந்து கழற்றி விடப்பட்ட ஸ்ரேயாஸ் ஐயர் மீண்டும் இடம் பெற உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அண்மையில் முடிவடைந்த சாம்பியன்ஸ் டிராபியில் அசத்தியதால் அவருக்கு பி.சி.சி.ஐ. மீண்டும் வாய்ப்பு வழங்க உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

## ஐதராபாத்துக்கு எதிராக அபார ஆட்டம்:
# ஆரஞ்சு, ஊதா நிற தொப்பியை வென்ற லக்னோ அணி வீரர்கள்




**ஐதராபாத், மார்ச் 29-**
ஐதராபாத்துக்கு எதிராக அபார ஆட்டம்: ஆரஞ்சு, ஊதா நிற தொப்பியை லக்னோ வீரர்கள் வென்றனர்.

**பந்துவீச்சை தேர்வு...**
நடப்பு ஐ.பி.எல். தொடரில் ஐதராபாத்தில் உள்ள ராஜீவ் காந்தி ஸ்டேடியத்தில் நடந்த 7-வது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் - லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ பந்து வீச்சை தேர்வு செய்தது .அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கு 190 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 47 ரன்கள் அடித்தார். லக்னோ தரப்பில் ஷர்துல் தாகூர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

**ஆட்ட நாயகன்....**
பின்னர் 191 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய லக்னோ அணி 16.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 193 ரன்கள் குவித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக நிக்கோலஸ் பூரன் 26 பந்துகளில் 70 ரன்கள் விளாசினார். சிறப்பாக பந்துவீசிய ஷர்துல் தாகூர் ஆட்ட நாயகன் விருதை வென்றார். இந்த ஆட்டத்தில் அபாரமான செயல்பாட்டை வெளிப்படுத்திய நிக்கோலஸ் பூரன் அதிக ரன் குவித்த வீரர்களுக்கு வழங்கப்படும் ஆரஞ்சு நிற தொப்பியை கைப்பற்றினார்.

**ஊதா நிற தொப்பி...**
முதலிடத்தில் இருந்த டிராவிஸ் ஹெட்டை பின்னுக்கு தள்ளி ஆரஞ்சு தொப்பியை தன்வசப்படுத்தினார். 2 ஆட்டங்களில் விளையாடியுள்ள பூரன் 145 ரன்கள் அடித்து முதலிடத்தில் உள்ளார். இது ஒவ்வொரு ஆட்டத்தை பொறுத்து மாறிக்கொண்டே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் அதிக விக்கெட் கைப்பற்றிய வீரருக்கு வழங்கப்படும் ஊதா நிற தொப்பியை ஷர்துல் தாகூர் வசப்படுத்தியுள்ளார். 2 ஆட்டங்களில் ஆடி 6 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார்.2-வது இடத்தில் சென்னை அணியின் நூர் அகமது (4 விக்கெட்டுகள்) உள்ளார்.

# ஐதராபாத்துக்கு எதிராக வெற்றி பெற்றது நிம்மதி: ரிஷப் பண்ட்

**ஐதராபாத், மார்ச் 29-**
ஐ.பி.எல். தொடரில் ஐதராபாத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஐதராபாத் - லக்னோ அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் லக்னோ 16.1 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 193 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. லக்னோ தரப்பில் அதிரடியாக ஆடிய நிக்கோலஸ் பூரன் 26 பந்தில் 70 ரன்கள் எடுத்தார்.

**நிம்மதியளிக்கிறது....**
இந்நிலையில், இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்ற பின்னர் லக்னோ கேப்டன் ரிஷப் பண்ட் அளித்த பேட்டியில் கூறியதாவது, இப்போட்டியில் வெற்றிபெற்றது நிம்மதியளிக்கிறது. ஒரு அணியாக, கட்டுப்படுத்த முடியாதவற்றில் கவனம் செலுத்த முடியாது, என் வழிகாட்டி கட்டுப்படுத்தக்கூடியவற்றில் கவனம் செலுத்துங்கள் என்று கூறினார், அதைத்தான் நான் இப்போட்டியில் செய்தேன். பிரின்ஸ் யாதவ் பந்துவீசிய விதத்தைப் பார்க்கும் போது சிறப்பாக இருந்தார். அதே போல் ஷர்தூல் தாக்கூரும் மிக நன்றாக பந்துவீசினார்.

**மூன்றாம் இடத்தில்...**
இந்த ஐ.பி.எல் தொடரில் நிக்கோலஸ் பூரனை மூன்றாம் இடத்தில் களமிறங்க வாய்ப்பு வழங்கியுள்ளது, நாங்கள் அவருக்கு சுதந்திரம் கொடுக்க விரும்புகிறோம் என்பதை உணர்த்துகிறது. ஒருவர் நன்றாக பேட்டிங் செய்து, நமக்காக அற்புதமாக விளையாடும் போது அவருக்கு தேவையான சுதந்திரத்தை நாம் வழங்க வேண்டும். அணி சிறப்பாக முன்னேறி வருகிறது. இதுவரை நாங்கள் எங்களால் முடிந்த வரை சிறப்பாக விளையாடவில்லை, வெற்றி பெற்றதில் மகிழ்ச்சி அடைகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## புள்ளிகள் பட்டியல்

| வரிசை | அணிகள் | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | நெட் ரன்ரேட் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பெங்களூரு | 1 | 1 | 0 | 2 | +2.137 |
| 2 | லக்னோ | 2 | 1 | 0 | 2 | +0963 |
| 3 | பஞ்சாப் | 1 | 1 | 0 | 2 | +0.550 |
| 4 | சென்னை | 1 | 1 | 0 | 2 | +0.493 |
| 5 | டெல்லி | 1 | 1 | 0 | 2 | +0.371 |
| 6 | ஐதராபாத் | 2 | 1 | 1 | 2 | -0.128 |
| 7 | கொல்கத்தா | 2 | 0 | 1 | 2 | -0.308 |
| 8 | மும்பை | 1 | 0 | 1 | 0 | -0.493 |
| 9 | குஜராத் | 1 | 0 | 1 | 0 | -0.550 |
| 10 | ராஜஸ்தான் | 2 | 0 | 2 | 0 | -1.882 |

## இன்றைய ஐ.பி.எல் (9-வது லீக்)




அணிகள் - குஜராத் vs மும்பை
இடம் - அகமதாபாத் மணி - இரவு 7.30

# மதவெறி மனநிலையை இந்தியாவால் மாற்ற முடியாது - மத்திய அமைச்சர்

**இஸ்லாமாபாத், மார்ச் 29-**
பாகிஸ்தானில் மதவெறி மனநிலையை இந்தியாவால் மாற்ற முடியாது என்று மத்திய மந்திரி ஜெய்சங்கர் பேசியுள்ளார்.
நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் பதிலளித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;-
பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையினரின் நிலையை இந்தியா மிக உன்னிப்பாக கண்காணித்து வருகிறது. இந்த விவகாரத்தில் இந்தியா தனது நிலைப்பாட்டை வெளிப்படையாக தெரிவித்துள்ளது. ஆனால் பாகிஸ்தானின் மதவெறி மனநிலையை இந்தியாவால் மாற்ற முடியாது. பாகிஸ்தானில் கடந்த மாதம் இந்துக்கள் தாக்கப்பட்ட 10 சம்பவங்கள் அரங்கேறியுள்ளன. இதில் 7 சம்பவங்கள் கடத்தல் மற்றும் கட்டாய மதமாற்றம் தொடர்பானவை, 2 சம்பவங்கள் கடத்தல் தொடர்பானவை. மேலும் ஒரு சம்பவத்தில் ஹோலி கொண்டாடிய மாணவர்கள் மீது காவல்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.
சீக்கிய சமூகத்தினருக்கு எதிராகவும் 3 அத்துமீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. முதல் சம்பவத்தில் ஒரு சீக்கிய குடும்பம் தாக்கப்பட்டது, மற்றொரு நிகழ்வில் ஒரு பழைய குருத்வாராவை மீண்டும் திறந்ததற்காக ஒரு சீக்கிய குடும்பம் அச்சுறுத்தப்பட்டது. மேலும் ஒரு சம்பவம் சீக்கிய சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை கடத்தி மதம் மாற்றியது தொடர்பானது.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# த.வெ.க. மாவட்ட செயலாளர்களுக்கு பொதுச்செயலாளர் கடும் எச்சரிக்கை

**சென்னை, மார்ச் 29-**
தமிழக வெற்றிக்கழக பொதுச்செயலாளர் ஆனந்த் மாவட்ட செயலாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.
தமிழக வெற்றிக்கழக பொதுக்குழு கூட்டத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:- விஜய் கூட நான் இல்லை என்றால் என் நிழலே என் கூட வராது. தமிழக வெற்றிக்கழக வில் கட்சிக்காக உழைத்தவர்களுக்கு மட்டுமே பொறுப்புகள் வழங்கப்படுகிறது. உழைக்காதவர்கள் யாருக்கும் பதவிகள் வழங்கப்படுவதில்லை நாங்கள் வீர வசனம் பேசி விட்டு கைதட்டல் வாங்கும் கூட்டம் அல்ல, உண்மையாக உழைக்கும் கூட்டம்.
இதுவரை 54 ஆயிரம் வாக்குச்சாவடிகளுக்கு நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பூத் கமிட்டி மாநாடு தொடர்பான அறிவிப்பு நேற்று மாலை வெளியாகும். கிராமங்கள் தோறும் தவெக கிளை உருவாக்கப்படும்'' என்றார். மேலும், முறையாக பூத் கமிட்டி அமைக்காத 6 மாவட்டச் செயலாளர்களுக்கு தமிழக வெற்றிக்கழக பொதுச்செயலாளர் ஆனந்த் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## சிறப்பான பேட்டிங்: கம்மின்ஸ்

ஐ.பி.எல். தொடரில் ஐதராபாத்தில் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் ஐதராபாத் - லக்னோ அணிகள் மோதின. 191 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த லக்னோ 16.1 ஓவரில் 5 விக்கெட்டை மட்டும் இழந்து 193 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. லக்னோ தரப்பில் அதிரடியாக ஆடிய நிக்கோலஸ் பூரன் 26 பந்தில் 70 ரன்கள் எடுத்தார். இந்நிலையில், இந்த ஆட்டத்தில் தோல்வி கண்ட பின்னர் ஐதராபாத் கேப்டன் கம்மின்ஸ் அளித்த பேட்டியில் கூறியதாவது,
இது முந்தைய போட்டியை விட சற்று மாறுபட்ட விக்கெட்டாக இருந்தது. அதனால் நாங்கள் இங்கு விரைவாக ரன்களைச் சேர்க்க வேண்டி இருந்தது. அவர்கள் மிகவும் சிறப்பாக பேட்டிங் செய்தனர். இருப்பினும் இதனை ஒரு நல்ல விக்கெட் என்று கூறுவேன். அதுவும் உலகின் இரண்டாவது நல்ல விக்கெட் இதுவாகும். அவர்கள் இப்போட்டியில் மிகவும் நன்றாக பந்துவீசினர். மேலும், அவர்கள் சிறந்த திட்டத்தையும் கொண்டிருந்தனர் இவ்வாறு அவர் கூறினார்.

## டோனி மின்னல் வேக ஸ்டம்பிங்




ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் விளையாடின. இதில் டாஸ் வென்ற சென்னை பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி பவர்பிளேயான முதல் 6 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 56 ரன்கள் அடித்தது.
அதிரடியாக விளையாடிய பில் சால்ட் 32 ரன்களில் (16 பந்துகள்) நூர் அகமது பந்துவீச்சில் மகேந்திரசிங் தோனியால் மின்னல் வேகத்தில் ஸ்டம்பிக் செய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. தற்போது வரை பெங்களூரு அணி 8 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 77 ரன்கள் அடித்துள்ளது. கோலி 12 ரன்களுடனும், ரஜத் படிதார் 1 ரன்னுடனும் களத்தில் உள்ளனர். படிக்கல் 27 ரன்களில் ஆட்டமிழந்தார்.

## நிக்கோலஸ் பூரன் சாதனை

18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழாவில், ஐதராபாத்தில் உள்ள ராஜீவ்காந்தி ஸ்டேடியத்தில் நடந்த 7-வது லீக் ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் - லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற லக்னோ பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஐதராபாத் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கு 190 ரன்கள் எடுத்தது. அதிகபட்சமாக டிராவிஸ் ஹெட் 47 ரன்கள் அடித்தார். லக்னோ தரப்பில் ஷர்துல் தாகூர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.
பின்னர் 191 ரன்கள் இலக்கை நோக்கி ஆடிய லக்னோ அணி 16.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கு 193 ரன்கள் குவித்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக நிக்கோலஸ் பூரன் 26 பந்துகளில் 70 ரன்கள் விளாசினார். இந்த ஆட்டத்தில் நிக்கோலஸ் பூரன் வெறும் 18 பந்துகளில் அரைசதம் அடித்தார். இதனையும் சேர்த்து ஐ.பி.எல். தொடரில் இதுவரை 4 முறை 20க்கும் குறைவான பந்துகளில் அரைசதம் அடித்துள்ளார். இதன் மூலம் ஐ.பி.எல். வரலாற்றில் 4 முறை 20க்கும் குறைவான பந்துகளில் அரைசதம் அடித்த முதல் பேட்ஸ்மேன் என்ற வரலாற்று சாதனையை அவர் படைத்துள்ளார்.

## பாக்.-நியூசிலாந்து மோதல்

நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற டி20 தொடரை நியூசிலாந்து 4-1 என்ற கனக்கில் கைப்பற்றி விட்டது. அடுத்ததாக இவ்விரு அணிகள் இடையே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது.
இதன் முதலாவது ஆட்டம் இன்றைய இந்திய நேரப்படி அதிகாலை 3.30 மணியளவில் நேப்பியரில் நடைபெற உள்ளது. டி20 தொடரில் அடைந்த தோல்விக்கு பதிலடி கொடுக்க பாகிஸ்தான் முயற்சிக்கும். மறுபுறம் சொந்த மண்ணில் ஒருநாள் தொடரை வெல்ல நியூசிலாந்து முயற்சிக்கும் என்பதால் இந்த ஆட்டம் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு அறிவிப்பு
## 1 கோடிக்கும் அதிகமானவர்கள் பயனடைவர்

**புதுடெல்லி, மார்ச் 29-**
மத்திய அரசு ஊழியர்களுக்கு 2 சதவீதம் வரை அகவிலைப்படி உயர்த்தப்பட்டுள்ளது. மொத்தம் 1 கோடிக்கும் அதிகமானவர்கள் பயனடைய உள்ளனர்.
மத்திய, மாநில அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி என்பது வழங்கப்பட்டு வருகிறது. இதனை சுருக்கமாக டி.ஏ. என்பார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி ஆண்டுக்கு 2 முறை உயர்த்தி வழங்கப்படும். அதாவது நாட்டில் நிலவும் பணவீக்கம் மற்றும் விலைவாசி உயர்வு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் வைத்து அகவிலைப்படி என்பது மாற்றி அமைக்கப்படும். கடந்த ஜனவரி மாதம் அகவிலைப்படி உயர்த்தப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் உயர்த்தப்படவில்லை. இந்நிலையில், மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை உயர்த்த மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது. டெல்லியில் நேற்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படியை 2 சதவீதம் வரை உயர்த்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு ஜூலை மாதம் 3 சதவீத அகவிலைப்படி உயர்வு அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி என்பது 53 சதவீதமாக உள்ளது.
தற்போது 2 சதவீதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மத்திய அரசு ஊழியர்களுக்கான மொத்த அகவிலைப்படி என்பது 55 சதவீதமாக அதிகரித்துள்ளது. இந்த 2 சதவீத அகவிலைப்படி உயர்வு என்பது வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் வழங்கப்பட உள்ளது. அப்போது ஜனவரி முதல் மார்ச் வரையிலான 3 மாத அகவிலைப்படி அரியர்ஸ் உடன் வழங்கப்பட உள்ளது. இந்த அகவிலைப்படி மூலம் நாடு முழுவதும் 49.18 லட்சம் மத்திய அரசு ஊழியர்களும், 67.95 லட்சம் ஓய்வூதியதாரர்கள் என்று மொத்தம் 1 கோடிக்கும் அதிகமானவர்கள் பயனடைய உள்ளனர். மத்திய அரசு ஊழியர்கள் 3 சதவீதம் முதல் 4 சதவீதம் வரை அகவிலைப்படி உயரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மத்திய அரசு 2 சதவீதம் வரை மட்டுமே உயர்த்தி உள்ளது ஊழியர்களிடையே சற்று வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது.

# வீராணம் ஏரியில் படகு இல்லமா..? சட்டசபையில் அமைச்சர் விளக்கம்

**சென்னை, மார்ச் 29-**
வீராணம் ஏரியில் படகு இல்லம் அமைக்கப்படுமா என்ற கேள்விக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ராஜேந்திரன் கூறினார்.
தமிழக சட்டசபையின் நேற்றைய கேள்வி நேரத்தின் போது, கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் தொகுதி வீராணம் ஏரி சுற்றுலா பயணிகள் ஈர்க்கும் வகையில் கந்தகுமரம் பகுதியில் படகு இல்லம் அமைக்கும் பணி இந்தாண்டு பணிகள் தொடங்கப்படுமா என்று சட்டமன்ற உறுப்பினர் சிந்தனை செல்வன் கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜேந்திரன், வீராணம் ஏரியில் படகு இல்லம் அமைப்பது குறித்து முதல்-அமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை என்று பதில் அளித்தார்.
தொடர்ந்து, சட்டமன்ற உறுப்பினர் அந்தியூர் வெங்கடாசலம்: வரட்டுப்பள்ளம் அணை, கெட்டி சமுத்திரம் ஏரியில், அந்நியூர் ஏரி ஆகியவற்றில் படகுகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் ராஜேந்திரன், வரட்டுப்பள்ளம் அணை, கெட்டி சமுத்திரம் ஏரியில் நீர்வரத்து நிலையாக இல்லாததால் சாத்தியம் இல்லை என்றும் சட்டமன்ற உறுப்பினர் நிதி வழங்குவதாக தெரிவித்துள்ளதால் அந்தியூர் ஏரியில் படகு சேவை தொடங்க அரசு ஆவன செய்யும் என்று பதில் அளித்தார்.

# 25 ஆயிரம் கி.மீ. நெடுஞ்சாலை 4 வழிச்சாலையாக மாற்றப்படும்
## மத்திய அமைச்சர் நிதின் கட்காரி தகவல்

**புதுடெல்லி, மார்ச் 29-**
25 ஆயிரம் கி.மீ. நெடுஞ்சாலையை 4 வழிச்சாலையாக மாற்றப்படும் என்று நிதின் கட்காரி கூறியுள்ளார்.
நாடாளுமன்ற மக்களவை கேள்வி நேரத்தில் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை மந்திரி நிதின் கட்காரி ஒரு கேள்விக்கு பதில் அளித்தார். அவர் கூறியதாவது:-
தற்போது இருவழிச்சாலையாக உள்ள 25 ஆயிரம் கி.மீ. தூர நெடுஞ்சாலைகளை 4 வழிச்சாலைகளாக மாற்ற மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. ரூ.10 லட்சம் கோடி செலவில் இப்பணி மேற்கொள்ளப்படும். இதற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயாராகி வருகின்றன. 2 ஆண்டுகளில் இப்பணி முடிவடையும் என்று நம்புகிறோம். இந்த சாலை பணிகளுக்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அவை முடிந்தவுடன், சாலை விபத்துகள் எண்ணிக்கை கணிசமாக குறையும். இது போல், 16 ஆயிரம் கி.மீ. தூர தேசிய நெடுஞ்சாலைகள், ரூ.6 லட்சம் கோடி செலவில் 6 வழிச்சாலைகளாக மாற்றப்படும்.
மேலும், காஷ்மீர், வடகிழக்கு மாநிலங்கள், இமாசல பிரதேசம், உத்தரகாண்ட் போன்ற மலை மாநிலங்கள் ஆகியவற்றில் நெடுஞ்சாலைகள் மேம்பாட்டுக்கு மோடி அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது.காஷ்மீரில் ரூ.2 லட்சம் கோடி மதிப்புள்ள சாலை கட்டுமான பணிகள் நடந்து வருகின்றன. அவற்றில் எளிதான பயணத்துக்காக 105 சுரங்கங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

# உண்மைக்கு புறம்பாக பொய் செய்திகளை பரப்பி வருகிறார்
## இ.பி.எஸ். மீது அமைச்சர் ரகுபதி குற்றச்சாட்டு

**சென்னை, மார்ச் 29-**
உண்மைக்கு புறம்பாகவும், தமிழக மக்களின் நலனுக்கு எதிராகவும் பல்வேறு பொய் செய்திகளை எடப்பாடி பழனிசாமி பரப்பி வருவதாக ரகுபதி தெரிவித்துள்ளார்.
சட்டத்துறை அமைச்சர் ரகுபதி தலைமைச் செயலகம், சட்டப்பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்து அளித்த பேட்டியில் கூறியதாவது:-
எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி உண்மைக்கு புறம்பாகவும், தமிழக மக்களின் நலனுக்கு எதிராகவும் பல்வேறு பொய் செய்திகளை இன்றைக்கு பரப்பிக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். தமிழகத்தை பொறுத்த வரைக்கும், நாங்கள் அமைதி பூங்காவாக திகழ்கிறது என்று சொல்வதிலே எந்தவிதமான தவறும் கிடையாது. கடந்த 20 ஆண்டு கால வரலாற்று புள்ளி விவரங்களை நாம் எடுத்து பார்த்தோமேயானால், அதிகமாக 2012-ஆம் ஆண்டில் நடந்திருக்கின்ற குற்றச் சம்பவங்கள் 1943 - 2013-ல் 1927 - கடந்த ஆண்டில் 1540. மக்கள் தொகை பெருகுகிறது; குற்றச் சம்பவங்கள் பெருகுகிறது என்றெல்லாம் சொல்கின்ற இந்த நேரத்தில், அண்ணா திமுக ஆட்சியில், அம்மையார் ஆட்சியிலும் சரி, எடப்பாடி ஆட்சியிலும் சரி அன்றைக்கு குற்றச் சம்பவங்களின் எண்ணிக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தாலே தெரியும்.
ஆனால், ஒரு சில தொடர் நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு அதன் மூலமாக ஏதோ தமிழகத்திலே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்கின்ற தவறான தகவல்களை இன்றைக்கு எடப்பாடி பழனிசாமி பரப்பி வருகின்றார். அதற்குக் காரணம் தமிழகத்தை நோக்கி பல்வேறு தொழிற்சாலைகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த தொழிற்சாலைகள் தமிழக மக்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. தமிழக மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுகிறது.
இதையெல்லாம் கண்டு பொறாமை கொண்டு தமிழகத்தின் வளர்ச்சியை தடுக்க வேண்டும் என்பதற்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றைக்கு ஆட்சியில் இருக்கிறது என்கின்ற காரணத்திற்காக, எடப்பாடி பழனிசாமி ஏதோ தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது. இங்கே எதற்கும் அமைதி பூங்கா இல்லை என்ற தவறான தகவல்களை பரப்பி, மக்களை அச்சுறுத்தி வருகின்றாரே தவிர, எந்த இடத்திலும்.
எந்த காலத்திலும் அவர்களுடைய காலத்தில் நடைபெற்றது போல தூத்துக்குடி சம்பவமோ, பரமக்குடி சம்பவமோ அல்லது துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களோ, கலவரங்களோ எதுவும் எங்களுடைய இந்த நான்கு ஆண்டு கால ஆட்சியில் கிடையாது. இது ஒன்றே போதும் - தமிழ்நாடு அமைதி பூங்காவாக இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டான சம்பவம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். இன்றைக்கு (நேற்று) சட்டமன்றத்தில், ஜீரோ நேரத்தில் பேசுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் என்கின்ற முறையில், எடப்பாடி பழனிசாமி சட்டப்பேரவை தலைவர்களிடத்தில் கேட்டார்கள்.
ஆனால், அவர்களுடைய 10 ஆண்டு காலத்தில் எழுதப்பட்ட ஒரு நீதி. அதாவது சட்டமன்றம் துவங்குவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக ஜீரோ நேரத்தில் நாங்கள் என்ன பிரச்சனையை கிளப்ப இருக்கிறோம் என்பதை பற்றிய புள்ளி விபரத்தை சட்டப்பேரவை தலைவர் இடத்திலே தந்தால் அவர் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி பதிலை பெற முடியும். அமைச்சர் பதில் இல்லை என்று சொல்லிவிட்டால் பிரச்சனை மட்டும் எழுப்ப முடியும்.
ஆனால், இன்றைக்கு (நேற்று) அரை மணி நேரத்திற்கு முன்பாக அல்லாமல், சட்டப்பேரவை துவங்குவதற்கு ஒரு சில நிமிடங்களுக்கு குறைந்தது 7 அல்லது 8 நிமிடங்களுக்கு முன்னால், கொறடா சட்டப்பேரவை தலைவர் இடத்தில் நாங்கள் காவல்துறையைப் பற்றி ஒரு பிரச்சனையை எழுப்பப் போகிறோம் என்று சொன்னாரே தவிர, என்ன பிரச்சனையை எழுப்ப போகிறோம் என்பதை கூட அவர்கள் சொல்லவில்லை. எழுத்து மூலமாக எழுதி தரவில்லை. ஆனால், ஜீரோ நேரத்தில் எழுந்து கொண்டு எங்களைப் பேச அனுமதிக்க மறுக்கிறீர்கள் என்று சத்தம் போடுவது, எங்களுடைய துணை முதலமைச்சர் உடைய பதிலுரையை புறக்கணிக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு அவர்கள் செய்திருக்கும் செயல் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# ராமநாதபுரத்தில் 10-ம் வகுப்பு தேர்வை 16,823 மாணவர்கள் எழுதுகின்றனர்

## கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தகவல்



**ராமநாதபுரம், மார்ச் 29-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வினை 16,823 மாணவ மாணவிகள் எழுதுகின்றனர் என மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் காலோன் தெரிவித்தார். ராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்புக்கான அரசு பொதுத்தேர்வு நடைபெற்றதை மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் பார்வையிட்டு ஆய்வு செய்தார் அப்போது அவர் கூறியதாவது:-

பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மாநிலம் முழுவதும் தொடங்கி நடைபெறுகிறது. ராமநாதபுரம் மாவட்டத்தில் 8,067 மாணவர்களும், 8,326 மாணவிகளும் தனித்தேர்வர்களாக 430 மாணவர்களும் என மொத்தம் 16,823 மாணவ, மாணவிகள் 82 தேர்வு மையங்களில் தேர்வு எழுதுகின்றனர். மேலும் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் தேர்வு எழுதவுள்ள காது கேளாத, கண்பார்வையற்றோர், உடல் உறுப்புகளின் மாற்றுத்திறன் கொண்ட 136 மாணவர்கள், எவ்வித சிரமமின்றி தேர்வு எழுதும் வகையில் தேவையான கூடுதல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளது. தேர்வு பணிகளில் பள்ளிக்கல்வித்துறை இணை இயக்குநர், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள் பணி மேற்கொள்வார்கள். அனைத்து தேர்வு மையங்களிலும் காவல் துறை மூலம் உரிய பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் ஒவ்வொரு தேர்வு மையத்திலும் போதிய குடிநீர் வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப் பட்டதுடன், தடையின்றி மின்சாரம் வழங்கிடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாணவ, மாணவிகள் எவ்வித அச்சமின்றி தேர்வு எழுதி வெற்றி பெற்றிட வேண்டும். இவ்வாறு கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்தார்.

இந்த ஆய்வில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சின்னராசு மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள், ஆசிரியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு

# திருமங்கலத்தில் ஆட்டு சந்தை விற்பனை அமோகம்



**திருமங்கலம், மார்ச் 29-**

ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் களைகட்டிய ஆட்டுச் சந்தையில் ரூ.4 கோடிக்கு மேல் ஆடுகள் விற்பனை அமோகம் நடைபெற்றது. எனினும் ஆடுகளின் விலை வழக்கத்தை விட அதிகமாக இருந்ததாக வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

ரம்ஜான் பண்டிகை வருகிற 31-ம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு தென் மாவட்டத்தின் முக்கிய ஆட்டுச் சந்தையாக திகழ்ந்திடும் திருமங்கலம் ஆட்டுச் சந்தையில் சுற்றுவட்டார பகுதியில் இருந்து பல்லாயிரக்கணக்கான ஆடுகள் விற்பனைக்கு வந்தன. திருமங்கலம் ஆட்டுச் சந்தையில் விற்பனையாகும் ஆடுகளின் இறைச்சி சுவை மிகுந்ததாக இருப்பதால் இங்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் ஆடுகளை வாங்கி செல்வது வழக்கம்.

இந்த ஆட்டுச் சந்தையில் திருமங்கலம் மட்டுமல்லாது மதுரை, திண்டுக்கல்,தேனி, விருதுநகர்,நெல்லை ,தூத்துக்குடி,தென்காசி உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஆட்டு வியாபாரிகள் ஆடுகளை வாங்கிட அதிகாலை முதலே வந்து குவிந்திருந்தனர்ரம்ஜான் பண்டிகை என்பதால் ஆடுகளின் விலை 5ஆயிரம் ரூபாயிலிருந்து 25,000 வரை போனது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ஆடுகளின் விலை ஆயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரம் ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளதாகவும் ரம்ஜான் பண்டிகை வரத்து அதிகமாக இருந்ததால் விலையும் உயர்ந்துள்ளதால் வேறு வழியின்றி வாங்கி செல்வதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். ஆடுகள் வரத்து அதிகமாக இருந்தும் ஆடுகளின் விலை உயர்ந்துள்ளதாக ஆட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர். திருமங்கலம் ஆட்டுச் சந்தையில் நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணி முதல் ஆடு விற்பனை களைகட்டி ரூ. 4கோடிக்கு மேல் ஆடுகளின் வர்த்தகம் நடைபெற்றதாக தகவல்கள் வெளியானது.



விருதுநகர் மாவட்டம் பாலவநத்தம் நோபல் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு மையத்தை கலெக்டர் ஜெயசீலன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# மேலூர் அருகே சட்ட விழிப்புணர்வு முகாம்



**மேலூர், மார்ச் 29-**

மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு சார்பில் சட்ட விழிப்புணர்வு முகாம் பொட்டப்பட்டி சமுதாய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மேலூர் வட்ட சட்டப்பணிகள் குழு தலைவரும், மேலூர் சார்பு நீதிமன்ற நீதிபதியுமான எம். சாமுண்டீஸ்வரி பிரபா பொதுமக்களுக்கு சட்டப் பணிகள் விழிப்புணர்வு குறித்து பேசினார். நீதிமன்றத்தில் இருந்து குற்ற வழக்கு அல்லது பிரச்சினை உங்கள் மீது வரும் போது அதனை எப்படி கையாளுவது அதற்கு தான் இந்த சட்ட விழிப்புணர்வு முகாம். ஒருத்தரை கைதுபண்றாங்க அப்படின்னா என்ன காரணத்துக்காக கைது பண்றாங்க முதலில் அந்த காவல் நிலையத்திலிருந்து வர்றவங்க உங்க கிட்ட சொல்லணும் தெளிவா எடுத்துரைக்கனும் உங்களை வந்து கைது பண்றதுக்கான ஒரு சூழ்நிலையில் பெண்களாக இருந்தால் பெண்கள் மூலமாக தான் உங்களை கைது செய்ய முடியும் இதெல்லாம் அடிப்படையாக தெரிஞ்சு வச்சிருக்க வேண்டிய விஷயம் உங்களை நீதிமன்றத்துக்கு வந்து கொண்டு போறதுக்கு வந்து 24 மணி நேரம்தான் நீதிபதி முன்னாடி ஆஜர்படுத்தி உங்களுடைய தரப்பை உங்க பக்கம் தப்பு இருக்கா தப்பு இல்லையாங்குறத நீங்க நீதிபதி முன்னாடி சொல்லலாம் அவங்க பிடிச்சிட்டு போனாங்கன்றதுக்காக நம்ம பேசாம இருக்கணும்னு அவசியம் இல்ல உங்க தரப்பு நியாயத்தை எடுத்துரைக்கலாம் கட்டாயம் வழக்கறிஞரை ஏற்பாடு செய்து கொண்டு செல்ல வேண்டும் என்பது சட்டத்தில் உள்ளது.

நிறைய பசங்க எல்லாம் செல் போனை கையில் வைத்து கிட்டு இருக்காங்க 18 வயது பூர்த்தி அடையாத குழந்தைகள் என்ன செய்யறதுன்னு தெரியாம தவறு செஞ்சுடுறாங்க தவறு செஞ்சிட்டு நீதிமன்றத்துக்கு வரும் பொழுது ரொம்ப கஷ்டமா இருக்கு பெண்களுக்கு முதலில் நல்ல விஷயங்களை சொல்லி கொடுங்க நல்லது கெட்டதை தெரியப்படுத்துங்க தெரியாத நபர்கள் கிட்ட இருந்து அவர்களுக்கு தொலைபேசியில் இருந்து அழைப்பு வந்தாலோ இல்ல குறுந்தகவல் வந்தாலும் பதில் சொல்ல வேண்டாம் என்று சொல்லுங்க. பசங்கள் 18 வயது பூர்த்தி அடையாத பெண்ணை வந்து தவறான எண்ணத்தில் பார்த்தாலே தவறுன்னு சொல்றாங்க போக்ஸ்சோ சட்டத்தில் இது ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொருந்தும் நீங்கதான் அதாவது வருமுன் காப்போம் நம்ம வந்ததுக்கப்புறம் எப்படி சரி செய்கிறது என்று நாம் அதில் தற்காத்து கொள்கிறது என்று பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிமன்றத்தில் நீதிபதிகளையும், வட்டாட்சியர் அலுவலகத்தில் தாசில்தாரையும், காவல் நிலையங்களில் காவல்துறை அதிகாரிகளையும் அவ்வளவு எளிதாக அவர்களை பொது மக்கள் சந்திக்க முடியாது ஏனென்றால் அவர்களுக்கு பணி சுமை அதிகம். இந்த மேடையில் நாங்கள் அனைவரும் அமர்ந்திருக்கிறோம். இந்த முகாமில் உங்கள் புகாரை மனுவாக எழுதிக் கொடுக்கலாம் இல்லையென்றால் மேலூர் சட்ட வட்ட பணி குழுக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ அனுப்பலாம். இந்த மனுவினை மூன்று நாட்களுக்குள் விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நல்ல வாய்ப்பை நீங்கள் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், வாரிசு, பிறப்பு, இறப்பு சான்றிதழில் எந்த பிரச்சனையாக இருந்தாலும் எங்களது வழக்கறிஞர் அணி இலவசமாக ஆலோசனை வழங்குவார்கள் இவ்வாறு நீதிபதி சாமுண்டீஸ்வரி பிரபா பேசினார். நிகழ்ச்சியில் அரசு வழக்கறிஞர் சபாபதி, மேலூர் சங்க அனைத்து வழக்கறிஞர்கள், பொட்டப்பட்டி கிராம செயலாளர் சுரேஷ் குமார் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் இரண்டு நாட்கள் சர்வதேச மாநாடு



**விருதுநகர், மார்ச் 29-**

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில், இயந்திரவியல் துறை சார்பில், இத்தாலி காக்லியாரி பல்கலைக்கழகம் மற்றும் மலேசியா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஏ.என்.ஆர்.எப். உதவிடன் "மேம்பட்ட பொருட்கள், உற்பத்தி மற்றும் தொழில் நிலையான வளர்ச்சி -4.0" குறித்த இரண்டு நாட்கள் சர்வதேச மாநாடு வேந்தர் முனைவர். ஸ்ரீதரன் தலைமையில் துணைத் தலைவர் முனைவர். சசி ஆனந்த் துவக்கி வைத்தார். துணை வேந்தர் முனைவர். நாராயணன் மற்றும் பதிவாளர் வாசு தேவன் சிறப்புரையாற்றினர். கல்லூரிடீன் ஆறுமுகப்பிரபு வரவேற்று பேசினார். மாநாடு அமைப்பாளர் செந்தில் முத்து குமார், மாநாட்டின் முக்கியத்துவம், நிகழ்ச்சி பற்றி பேசுகையில் 180 ஆராய்ச்சி கட்டுரைகள் கள் வரபெற்றதாகவும், 15 உலகளாவிய வல்லுநர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

தலைமை விருந்தினராக பேராசிரியர் சீரம் இராமகிருஷ்ணா, தேசிய பல்கலைக்கழகம் சிங்கப்பூர் சிறப்புரையாற்றினார். கௌரவ விருந்தினர்களாக ,கிரிதர் ராஜு , சாலிட் ப்ரோ இன்ஜினியரிங், சென்னை மற்றும் பிளாவியோ ஸ்டோக்கினோ, காக்லியாரி பல்கலைக்கழகம், இத்தாலி கலந்து கொண்டு "மாநாட்டு மலரை" வெளியிட்டனர். வல்லுநர்கள் அனிஷ் கான், கே,ஏ. பல்கலைக்கழகம், சவுதி அரேபியா, ராகவாநந்தம் சண்முகம், பேரமண்ட்பல்கலைக் கழகம், அமெரிக்கா, மார்தா சகோன், கோஸ்டன்டினோ கார்லோ மாஸ்டினோ, சந்தோஷ் பரமசிவம், யுஒசி, இத்தாலி, .அஸ்ரினா.இலியாஸ், தாய்பிடின், யாஹ்யா, லின் ஃபெங், மலேசியா தொழில்நுட்பபல்கலைக்கழகம், அர்ணாஸ் மஜூம்தார், யுஒசி, இத்தாலி, வினீத் அனியா, ஐசிடி, ஹைதராபாத், . கோபிநாத் முவ்வல்லா, ஐஐடி, ஹைதராபாத் எஸ். மோகன், ஆர் சிஐ டிஜிட்டல், சென்னை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இயந்திரவியல், விமானியல், ஆட்டோமொபைல், சிவில் பொறியியல் ஆகிய துறைகளின் பள்ளி அனைத்து பேராசிரியர்களும் , மாணவர்களும் மாநாட்டை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். நிறைவாக துறைத் தலைவர் எம். ஆதம் கான் நன்றி கூறினார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் தீ விபத்து:

# 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மருந்து பொருட்கள் தப்பியது

**விருதுநகர், மார்ச் 29-**

ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உள்ள மருந்து குடோனில் திடீரென தீப்பிடித்தது உடனடியாக தீயணைப்புத் துறையினர் துரிதமாக செயல்பட்டு தீயை அனைத்ததால் சுமார் ரூ.10 லட்சம் மதிப்புள்ள மருந்து பொருட்கள் தப்பியது.

ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பேருந்து நிலையம் அருகே உள்ளது அரசு மருத்துவமனை. இந்த அரசு மருத்துவமனைக்கு தினமும் வெளி நோயாளியாக சுமார் 1400 க்கும் மேற்பட்டோர் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர் 150 பேர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். அரசு மருத்துவமனையில் வளாகத்தின் ஒரு பகுதியில் உள் நோயாளிகளுக்கும் வெளி நோயாளிகளுக்கும் மாத்திரை மருந்துகள் வழங்குவதற்காக தனியாக குடோன் உள்ளது.

இந்த குடோனில் சம்பவத்தன்று மாலை 7 மணிக்கு திடீரென தீ பிடித்தது தீப்பிடித்து இருந்த உடன் தீயணைப்புத் துறை மற்றும் மீட்பு பணித்துறை அதிகாரி முத்து செல்வத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டது.தீ விபத்து பற்றி தெரிந்தவுடன் தலைமை மருத்துவர் காளிராஜ் தலைமையில் மருத்துவர்களும் திரண்டு வந்தனர்.

மேலும் அந்த மருந்து குடோனில் உள்ள மருந்து பொருட்கள் அனைத்தும் வெளியே பாதுகாப்பாக கொண்டுவரப்பட்டன. எப்போதும் பரபரப்பாக உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள மருந்து குடோனில் திடீர் என தீப்பிடித்த சம்பவம் அரசு மருத்துவமனை பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# ஓட்டன்சத்திரத்தில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம்



**ஒட்டன்சத்திரம், மார்ச் 29-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகர தி.மு.க. சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டம் நகரச் செயலாளர் வெள்ளைச்சாமி தலைமையில் நடைபெற்றது.

ஒட்டன்சத்திரம் தொகுதி தேர்தல் பார்வையாளர் பரணிகே.மணி 2026 சட்டமன்ற தேர்தல் வியூகம் குறித்து பேசினார். கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் மோகன், தலைமை செயற்குழு உறுப்பினர் கண்ணன், நகர் மன்ற தலைவர் திருமலைச்சாமி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாண்டியராஜன் உள்ளிட்ட வாக்குச்சாவடி முகவர்கள் நிர்வாகிகள் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# பட்டிவீரன்பட்டி பேரூராட்சி மாதாந்திர வளர்ச்சி கூட்டம்



**வத்தலகுண்டு, மார்ச் 29-**

பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் மாதாந்திர வளர்ச்சிக் கூட்டம் நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகில் உள்ள பட்டிவீரன்பட்டி பேரூராட்சி மன்றக் கூட்டம் நடைபெற்றது. பட்டிவீரன்பட்டி பேரூராட்சியில் நடைபெற்ற கூட்டத்திற்கு பேரூராட்சித் தலைவர் சியாமளா தலைமை தாங்கினார். துணைத் தலைவர் கல்பனா தேவிஅருண்குமார் முன்னிலை வகித்தார். செயல் அலுவலர் கோபிநாத் வரவேற்றார். இக்கூட்டத்தில் 15 வது நிதிக்குழு டையட்டு மானியம் 2 வது தவணை திட்டத்தின் கீழ் 13வது வார்டு காளியம்மன் கோவில் அருகில் ரூ.3.75 லட்சம் மதிப்பீட்டில் போர்வெல் அமைத்து மினி பவர் பம்பு பொருத்துதல், பொது நிதியில் கீழ் ரூ.3.25 லட்சம் மதிப்பீட்டில் ஓம்சக்தி கோவில் சுண்ணாம்புகாளவாசல் தெரு, அம்பேத்கார்நகர், பகவதியம்மன் கோவில் பின்புறம், சர்ச் தெரு மற்றும் அய்யப்பன் கோவில் அருகில் உட்பட 6 இடங்களில் சிறுபாலம் அமைத்தல், வைகை கூட்டுக்குடிநீர் திட்டத்தில் பட்டிவீரன் பட்டி பேரூராட்சியை இணைக்க வேண்டும் உள்ளிட்ட 13 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் இளநிலை உதவியாளர் மோகனபிரியா நன்றி கூறினார்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே துப்பாக்கியுடன் பிடிபட்ட வாலிபர்

**விருதுநகர், மார்ச் 29-**

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே துப்பாக்கியுடன் சுற்றி திரிந்த சென்னை வாலிபர் ஒருவரை கிருஷ்ணன்கோவில் போலீசார் அதிரடியாக பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ளது பானாங்குளம் அந்தப் பகுதியில் சம்பவத்தன்று இருசக்கர வாகனம் ஒன்றில் இரண்டு பேர் வந்துள்ளனர் புதிதாக இரண்டு பேர் பானாங்குளம் பகுதிக்கு வந்தவுடன் கிராம மக்கள் சுற்றி பிடித்து விசாரித்தனர்.

அப்போது ஒருவர் ஓடிவிட்டார் பைக்கில் வந்த வாலிபர் பொதுமக்களிடம் சிக்கினார்.

இதனை தொடர்ந்து பொதுமக்கள்கிருஷ்ணன்கோவில் போலீசருக்கு தகவல் கொடுத்தனர். கிருஷ்ணன்கோவில் போலீசார் விரைந்து வந்து வாலிபரை பிடித்து கிருஷ்ணன்கோவில் காவல் நிலையத்திற்கு கொண்டு சென்று விசாரணை செய்தனர்.

அப்போது அதில் அவர் சென்னை மேடவாக்கம் பசும்பொன் நகரை சேர்ந்த சுகுமார் மகன் ராஜேஷ் வயது 22 என்பது தெரியவந்தது. ராஜேஷிடம் சோதனை நடத்திய போது இவர் துப்பாக்கி ஒன்று வைத்திருந்தார் இதனால் பரபரப்பு அடைந்த போலீசார் அவரைப்பற்றி விசாரணை நடத்திய போது தமிழகம் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட பல்வேறு வழக்குகள் ராஜேஷ் மீது இருப்பதாக தெரியவந்தது.



அதேபோல் தப்பி ஓடியவர் போலீசார் விசாரணையில் ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா கூடரேந்தல் செல்வராஜ் மகன் ஆரோக்கிய ராஜ் போஸ்கோ வயது 44 என்பதும் தெரிய வந்தது இதனைத் தொடர்ந்து கிருஷ்ணன் கோயில் போலீசார் தப்பி ஓடிய வாலிபரை தேடி வருகின்றனர் பாணாங்குளம் பகுதிக்கு எதற்காக துப்பாக்கியுடன் வந்தனர் என்பது குறித்து கிருஷ்ணன் கோவில் போலீசார் ஸ்ரீவில்லிபுத்தூர் டிஎஸ்பி ராஜா உத்தரவின் பெயரில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

# திருமங்கலம் ரயில் நிலையம் செல்ல மாற்றுப்பாதை கோரும் பயணிகள்

**திருமங்கலம், மார்ச் 29-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகரில் ரயில்வே மேம்பாலம் அமைத்திடும் பணிகளின் போது அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் உரிய நேரத்திற்கு ரயில் நிலையம் சென்றிட முடியாமல் தவித்திடும் ரயில் பயணிகள் தங்களுக்கு மாற்றுப்பாதை ஏற்பாடு செய்து தந்திட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். திருமங்கலம் நகர் ரயில் நிலையத்தின் அருகேயுள்ள விமானநிலைய சாலையில் ரயில்வே கேட் நீண்ட நேரம் மூடப்பட்டதால் அவ்வழியாகச் சென்றிடும் பொது மக்களும், மாணவ, மாணவிகளும், விவசாய, வணிகப்பெருமக்களும் காத்துக் கிடந்து பெரும் அவதிக்கு ஆளாகி வந்தனர்.

இதனை தொடர்ந்து விமான நிலையச் சாலையில் உள்ள ரயில்வே கேட்டில் புதிய மேம்பாலம் அமைத்திடும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதனிடையே ரயில் போக்குவரத்து காரணமாக அங்குள்ள ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுவதாலும்,சாலை மிகவும் குறுகலாக இருப்பதாலும் அந்த இடத்தில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்துகிடக்கும் நிலை உருவாகியுள்ளது. இதனால் ரயில் பயணம் மேற்கொள்ளவுள்ள பயணிகள் உரிய நேரத்திற்கு ரயில் நிலையம் சென்றிட முடியாமல் பெரும் அவதிக்கு ஆளாகி வருகின்றனர். எனவே ரயில்வே மேம்பால பணிகள் முடிவடைந்திடும் வரையில் இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும் விதமாக தற்காலிக ஏற்பாடாக மதுரை சாலையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியின் எதிர்புறம் கிறிஸ்டியா மங்கலம் தெரு வழியாக ரயில் நிலையம் சென்றிடும் பாதையை திறந்து விட வேண்டும் என ரயில் பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.தற்போது மூடப்பட்டுள்ள இந்த பாதையை திறந்து விட்டால் ஆட்டோ மற்றும் இலகுரக வாகனங்கள் மூலமாக ரயில் நிலையத்தை எளிதில் அடைந்திட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.மதுரை கோட்ட ரயில்வே நிர்வாகம் இந்த விஷயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு ரயில் பயணிகள் எளிதாக திருமங்கலம் ரயில் நிலையத்திற்கு உரிய நேரத்தில் சென்றடைய உதவிட வேண்டும் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாக உள்ளது.



சென்னை தலைமைச்செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று சட்டமன்ற பேரவையில் 2025-2026-ம் ஆண்டிற்கான மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தா.மோ.அன்பரசன், க.பொன்முடி, ஆர்.காந்தி ஆகியோர் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



சென்னையில் நேற்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை ஆகிய துறைகளின் மானிய கோரிக்கைகளின் மீதான விவாதங்களின்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பதிலளித்து உரையாற்றினார்.

### அனைவருக்குமான வளர்ச்சியே அரசின் இலக்கு:

# இந்தியாவின் வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, மார்ச் 29-

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியே அரசின் இலக்கு என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு என்றும் அவர் பெருமிதம் தெரிவித்தார்.

சென்னை கிண்டியில் உள்ள ஐ.டி.சி. தனியார் ஓட்டலில் நடைபெற்ற சி.ஐ.ஐ. தென் இந்திய மாநாட்டை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். மாநாட்டில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு தமிழகம் முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இந்தியாவின் வளர்ச்சியில் தமிழகம் முக்கிய பங்கு வகித்து வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சி தனித்துவமானது; தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி.

கோவை, திருச்சி, ஒசூர் போன்ற மாவட்டங்கள் பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளன; கடந்த 11 மாதங்களில் 12.6 பில்லியன் டாலர் அளவிற்கு மின்சாதனங்களை ஏற்றுமதி செய்துள்ளது இந்தியாவின் மொத்த உற்பத்தியில் தமிழ்நாடு 12.11 சதவீதம் பங்களிப்பு செய்து வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில், தமிழ்நாடு 8 சதவீதத்துக்கும் மேல் பொருளாதார வளர்ச்சி அடைந்து, இந்தியாவின் 2-வது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வருகிறது. தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடாமல், வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

2030-ம் ஆண்டிற்குள், தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் பொருளாதார மாநிலமாக உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் செயல்பட்டு வருகிறோம். நம் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல. சமூகநீதி, பெண்கள் முன்னேற்றம் என அனைவருக்குமான வளர்ச்சி.

தமிழ்நாடு - சிஐஐ இடையிலான உறவை மேலும் வலுப்படுத்துவேன். சென்னையை உலகத்தரம் வாய்ந்த நகரமாக மாற்ற 3-வது திட்டம் தயாராகி வருகிறது. பசுமைப் பொருளாதார துறையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நீர்வளங்களை திறம்பட நிர்வகித்தல், நீர் சேகரிப்பு உள்ளிட்டவற்றை செயல்படுத்தி வருகிறோம். தொழில் துறைக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

# செம்மஞ்சேரியில் விளையாட்டு நகரம் அமைக்க 100 ஏக்கர் நிலம் தயார்: தமிழ்நாடு அரசு

சென்னை, மார்ச் 29-

செம்மஞ்சேரியில் விளையாட்டு நகரம் அமைக்க 100 ஏக்கர் நிலம் தமிழக அரசு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழக சட்டசபையில், திட்டம், வளர்ச்சி, சிறப்பு முயற்சிகள் துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகிய துறைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்பு முன்வைக்கப்பட்டது. அதில் கூறப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் 4 அடுக்கு கட்டிடமாக உயர் செயல்திறன் பயிற்சி மையம், 250 படுக்கை வசதி, தங்கும் விடுதி, உடற்பயிற்சி கூடம் ஆகிய வசதிகளுடன் அமைக்கப்படும். நகர்ப்புறங்களில் டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதற்காக அரசு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆண்டு 12,838 நகர்ப்புற வார்டுகளில் 19,429 தொகுப்புகள் வினியோகம் செய்யப்படும்.

கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 2 லட்சத்து 62 ஆயிரத்து 688 மாணவர்கள், 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக கல்வி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இந்த ஆண்டுக்கான கலைஞர் உரிமைத் தொகை திட்டத்துக்காக ரூ.13,807 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இலங்கை தமிழர் குடும்பங்களையும் சார்ந்த 14,246 பெண்கள் உள்பட 1.15 கோடி பெண்கள் பயன் அடைந்து வருகின்றனர்.

விளையாட்டு நகரத்தை அமைக்க சென்னை செம்மஞ்சேரியில் 100 ஏக்கர் பரப்பளவு நிலம் அடையாளம் காணப்பட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு மாற்றப்பட்டு உள்ளது. இது, முக்கிய சர்வதேச விளையாட்டு நிகழ்வுகள், மாநிலத்தில் நடைபெற வழிவகுக்கும். பிரபலமான பாரம்பரிய விளையாட்டுகளை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதுடன், இளைஞர்களை விளையாட்டுகளை நோக்கி ஈர்க்க வழிவகுக்கும். இதற்கான விரிவான தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறு அறிக்கை முடிவடையும் தருவாயில் உள்ளது.

கோவை சிங்காநல்லூரில் 28.36 ஏக்கர் பரப்பளவில் சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கம் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். பெண்களுக்கு உரிய தரமான வேலைவாய்ப்பு திட்டம் ஒன்று ரூ.50 லட்சம் செலவில் ஒப்பந்த அடிப்படையிலான நிறுவனத்தின் மூலம் உருவாக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சுற்றுலா வாகனங்களுக்கு கட்டுப்பாடு: மனுவை ஏற்க சுப்ரீம் கோர்ட்டு மறுப்பு

புதுடெல்லி, மார்ச் 29-

ஊட்டி, கொடைக்கானலுக்கு செல்லும் சுற்றுலா வாகனங்களுக்கு கட்டுப்பாடு விதிப்புக்கு எதிரான மனுவை ஏற்க சுப்ரீப் கோர்ட்டு மறுத்துவிட்டது.

ஊட்டி, கொடைக்கானலுக்கு செல்லும் சுற்றுலா வாகனங்களின் எண்ணிக்கை விடுமுறை நாட்களில் கட்டுக்கடங்காமல் உள்ளது. இதனால், மலைப்பாதையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன், சுற்றுச்சூழலும் கடுமையாக பாதிக்கப்படுகிறது. இதைக் கருத்தில் கொண்டு ஊட்டி, கொடைக்கானலுக்கு சுற்றுலா வாகனங்கள் செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், சுற்றுலா பயணிகள் வருகை குறைவதால் தங்களின் ஓட்டல் தொழில் பாதிக்கப்படுவதாக தமிழ்நாடு ஓட்டல் உரிமையாளர்கள் சங்கம் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணை நீதிபதி சூரியகாந்த் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, "ஊட்டி, கொடைக்கானலில் வாகனங்கள் செல்ல கட்டுப்பாடுகள் விதித்த சென்னை ஐகோர்ட் உத்தரவில் தலையிட விரும்பவில்லை. அனைத்து சுற்றுச்சூழல் விவகாரங்களையும் கருத்தில் கொண்டே இந்த கட்டுப்பாட்டை ஐகோர்ட் விதித்திருக்கிறது என்று கூறி, மேல்முறையீட்டு மனுவை ஏற்க மறுத்துவிட்டது. மேலும், மீண்டும் சென்னை ஐகோர்ட்டை நாட அனுமதித்து மேல்முறையீட்டு மனுவை முடித்து வைத்தது.



சென்னை நந்தனத்தில் வணிகவரித்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 7 புதிய வாகனங்களை ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகத்தில் நேற்று வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வணிகவரித்துறை ஆணையர் டி.ஜகந்நாதன், இணை ஆணையர் மொ.நா.பூங்கொடி மற்றும் வணிகவரித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சட்டசபையில் நேற்று கவன ஈர்ப்பு தீர்மானம் விவாதத்துக்கு சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால் சட்டசபையில் இருந்து அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் வெளிநடப்பு செய்தனர்.




சென்னை, திருவான்மியூரில் நேற்று த.வெ.க.வின் முதல் பொதுக்குழு கூட்டம் அக்கட்சி தலைவர் விஜய் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்த நடிகர் விஜய் நிர்வாகிகளை பார்த்து கையசைத்த காட்சி.

# சிவகங்கையில் சட்டக்கல்லூரி அமைக்க வேண்டிய தேவையில்லை

## சட்டசபையில் அமைச்சர் ரகுபதி தகவல்

சென்னை, மார்ச் 29-

சட்டக்கல்லூரி அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்று அமைச்சர் ரகுபதி கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையின் கேள்வி நேரத்தின்போது, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சட்டக்கல்லூரி துவக்க அரசு ஆவண செய்யுமா என்று சட்டமன்ற உறுப்பினர் கே.பி.முனுசாமி கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமைச்சர் ரகுபதி, தமிழ்நாட்டில் 15 அரசு சட்டக் கல்லூரிகளும், 12 தனியார் சட்டக் கல்லூரிகளும் உள்ளது. 48,550 மாணவர்கள் அரசு சட்டக்கல்லூரி பயின்று வருகின்றனர். தமிழ்நாடு புதுச்சேரி பார் கவுன்சிலில் 1.75 லட்சம் வழக்கறிஞர்கள் பதிவு செய்துள்ளனர். வழக்கறிஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக தற்காலிகமாக சட்டக்கல்லூரி துவங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. நிதிநிலைக்கு ஏற்ப அரசு புதிய சட்டக்கல்லூரி அமைப்பது குறித்து முடிவு செய்யும் என்று பதில் அளித்தார்.

# எதிர்க்கட்சி உறுப்பினர்களை கண்டித்து ராஜ்யசபாவில் ஜக்தீப் தன்கர் வெளிநடப்பு

புதுடில்லி, மார்ச் 29-

ராஜ்யசபாவில் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை கண்டித்து ஜக்தீப் தன்கர் வெளிநடப்பு செய்தார்.

எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக, லோக்சபா நேற்று மதியம் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

ராஜ்யசபாவில் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை கண்டித்து, ஜக்தீப் தன்கர் வெளிநடப்பு செய்தார்.

பட்ஜெட் கூட்டத்தொடரின் 2-வது அமர்வு கடந்த மார்ச் 10ம் தேதி துவங்கியது. ஏப்., 4 வரை நடக்க உள்ளது. கூட்டத்தொடர் துவங்கி முதல் நாளில் இருந்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் காலை 11 மணிக்கு பார்லிமென்ட் இரு அவைகளும் கூடியது. லோக்சபா கூடியதும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் கூச்சல், குழப்பம் நிலவியது.

சபாநாயகர் ஓம் பிர்லா பலமுறை எச்சரித்தும் எம்.பி.,க்கள் கண்டுகொள்ளவில்லை. தொடர்ந்து கூச்சல் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

இதனால் அவையை மதியம் 2 மணி வரை ஒத்திவைத்து சபாநாயகர் ஓம் பிர்லா உத்தரவிட்டார்.

அதேபோல் ராஜ்யசபாவிலும் அவை கூடியதில் இருந்து எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அமளியில் ஈடுபட்டதால், அலுவல் ஆய்வு குழு கூட்டத்திலிருந்து ராஜ்யசபா தலைவர் ஜக்தீப் தன்கர் வெளிநடப்பு செய்தார். அவர் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளை கண்டித்து, அவையில் இருந்து வெளியேறினார்.

இதனால் ராஜ்யசபா துணை தலைவர் அவையை நடத்தினார்.

# ஜம்மு-காஷ்மீர் 3 பயங்கரவாதிகள் என்கவுண்ட்டரில் சுட்டுக்கொலை

## 3 போலீசார் வீர மரணம்

ஸ்ரீநகர், மார்ச் 29-

காஷ்மீரில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர். இதில் 3 போலீசார் வீர மரணம் அடைந்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பு படையினர் மற்றும் காஷ்மீர் போலீசார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், காஷ்மீரின் கதுவா மாவட்டம் ஜாக்ஹொல் கிராமத்தில் உள்ள வனப்பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து, வனப்பகுதிக்கு விரைந்து சென்ற போலீசார் அங்கு தேடுதல் வேட்டை நடத்தினர்.

அப்போது, அங்கு பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் திடீரென துப்பாக்கி சூடு நடத்தினர். இதில், 7 போலீசார் படுகாயமடைந்தனர். மேலும், இந்த என்கவுண்ட்டர் தொடர்பாக பாதுகாப்புப்படையினருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. அதேவேளை, வனப்பகுதியில் போலீசாருக்கும், பயங்கரவாதிகளுக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை நடைபெற்றது. இதில், பயங்கரவாதிகள் 3 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதேவேளை, இந்த மோதலின்போது போலீசார் 3 பேர் வீரமரணமடைந்தனர்.

என்கவுண்ட்டர் நடைபெற்ற பகுதியில் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். கொல்லப்பட்ட பயங்கரவாதிகள் பாகிஸ்தானை சேர்ந்த லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.